பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி 22 | திங்கட்கிழமை | (08.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 263

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

10 பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு

## வயோதிப மாதுவை கிணற்றில் தள்ளி விழுத்தியவர் கைது!

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டையில் வயோதிப மாது ஒருவரின் 10 பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு அவரைக் கிணற்றில் தள்ளிவிழுத்தி விட்டுத் தலைமறைவான நபரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அருணாசலம் சிவகுமார் என்பவரே பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர் ஆவார்.

பிரஸ்தாப வயோதிப மாதுவிடம் இருந்து கடந்த வாரம் அறுக்கப்பட்ட சங்கிலியை பிறிதொரு நபர் மூலம் அடகு வைக்க முற்பட்ட போது. பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். பிரஸ்தாப நபர் பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் தொடர்பு பட்டிருந்ததாகக்

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழீழக் காவல்துறை நடுவப் பணியகம் தலைவர் பிரபாவால் திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழக் காவல்துறை நடுவப் பணியகம் நேற்று முற்பகல் கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட விருந்தினராகக் கலந்து கொண்ட தலைவர் பிரபாகரன். தளபதிகள் பொறுப்பாளர்கள் சகிதம் நிகழ்வில் கலந்து கொண்டார்.

நிகழ்வின் மையத்துக்கு தமிழீழக் காவல்துறையின் விசேட அணிவகுப்பு மரியாதையுடன் தலைவர் அழைத்து வரப்பட்டார்.

பொதுச்சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் கடற்புலிகளின் விசேட தளபதி சூசை ஆகியோர் ஏற்றி வைக்க தேசியக்கொடியினை மூத்த தளபதி பொட்டு அம்மான் ஏற்றி வைத்தார். (வ-இ)

# எதிரிகள் போற்றுமளவிற்கு எமது காவல்துறை வளர்ச்சி கண்டுள்ளது!

## தேசியத் தலைவர் பிரபா புகழாரம்



(கிளிநொச்சி)

**'எமது விடுதலைப் போராட்டத்தின் முக்கிய திருப்பு முனையாகவே தமிழீழக் காவல் துறையை எமது மண்ணில் நிறுவினோம்' இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமிழீழ காவல் துறையின் நடுவப் பணியகத்தை கிளிநொச்சியில் திறந்து வைத்துப் பேசும் போது தெரிவித்தார்.**

தமிழீழக் காவல்துறையின் நடுவப் பணியகத்தை நேற்றுக் காலை 6.20 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் பேசும் மக்கள் கட்டிக்காத்து வந்த சமூக வாழ்வை அடியோடு புதைத்து அதன் மூலம் எமது இனத்தை அழிப்பதற்கு சிங்கள இனவாதிகள் முனைப்போடு செயற்பட்டு வந்த நெருக்கடி மிக்க காலகட்டத்திலும், ஆயிரம் ஆயிரம் போராளிகளின் உதிரத்தாலும், தியாகத்தாலும் உருவாகிவரும் எமது தாயகத்தை உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றி அமைத்து எமது தேசத்தின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் கட்டுக்கோப்பையும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் தமிழீழக் காவல்துறையை எமது மண்ணில் நிறுவினோம். இது எமது விடுதலைப் போராட்டத்தின் முக்கிய திருப்பு முனையும், முக்கிய மைல்கல்லுமாகும்.

**இடர் நிறைந்த சூழ்நிலையில் காவல்துறை நிறுவப்பட்டது**

சமூக வாழ்வு உயர்நிலை அடையும் போது தான் ஒரு இனம் முழுமை பெறுகிறது. இம் முழுமையான நிறைவு ஒரு இனத்துக்கு வரப்பிரசாதமாக அளிக்கப்படுவதில்லை; காலத்தால் உவந்தளிக்கப்படுவதுமில்லை. இதனை நாம் தான் வழிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு நாம் தான் உறுதியோடு போராட வேண்டும். இந் நிலையில் தான் எமது மண்ணில் தமிழீழக் காவல்துறை நிறுவப்பட்டது.

'அன்றைய கால கட்டத்தில் தமிழ் மக்களின் நிலை மிகுந்த இடர் நிறைந்தாகக் காணப்பட்டது. சிங்கள அரசின் இன அழிப்பு முனைப்புப் பெற்றிருந்தது. பொருளாதாரத் தடை இறுக்கமாக்கப்பட்டு உணவுப் பொருட்கள் அனைத்துக்கும் தட்டுப்பாடு இருந்தது. சட்டம், ஒழுங்கு முற்றாகச் சீர்குலைந்து ஈனச் செயல்கள் பெருகியிருந்தது.

இன்று உலகில் விபரீதமான மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. வளர்ச்சியுற்ற செல்வச் செழிப்பான

(10ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி-பிரதமர் சர்ச்சை தீர்வுக்காக ஐ.நா.சபையில்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான பலப் போட்டி ஐக்கிய நாடுகள் சபை வரை சென்றுள்ளது. இம் மாத இறுதியில் நடைபெறவுள்ள ஐ.நா.பொதுக் கூட்டத்தில் இவர்களில் யார் பங்கு பற்றுவதென புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

தான் இப் பொதுக் கூட்டத்தில் பங்கு பற்றப் போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அத்துடன் பிரதமருக்கு பதிலாக அதனது பெயரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் படி ஐ.நா.சபையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு உத்தரவிட்டுள்ளார். ஆனால் பிரதமரின் பெயர் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது. இந் நிலையில் இருவருக்கும் இடையிலான சர்ச்சை வலுவடைந்து விட்டது.

ஐ.நா.வின் எயிட்ஸ் தொடர்பான விஷேட மாநாட்டில் உரையாற்றும் படி ஐ.நா. சபை ஜனாதிபதியைக்

(10ம் பக்கம் பார்க்க)

## ரெலோ முன்னாள் உறுப்பினர் கத்திக்குத்துக்குப் பலியானார்

### மட்டு.ஆரையம்பதியில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் முன்னாள் ரெலோ உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபரின் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் ஆரையம்பதி செல்வா நகரைச் சேர்ந்த கந்தசாமி சந்திரமோகன் (வயது-25) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபரின் சடலம் செல்வா நகர்ச் சந்தியில் இருந்து காத்தான்குடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டு மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கொலைச் சம்பவம் தொடர்பாக காத்தான் குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## இந்திய கடற்படைத் தளபதியின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் மாதவேந்திரா சிங்கின் இலங்கை விஜயம் காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இவ்விஜயம் நேற்று நடைபெற இருந்தது. கடற்படை அதிகாரியின் விஜயத்தை ஒட்டி இந்திய கடற்படைக் கப்பல் ஒன்றும் இலங்கை வரவிருந்தது. எனினும் ஒத்திவைப்பிற்கான காரணத்தைக் கூற இந்திய உயர்ஸ்தானிகராலயப் பேச்சாளர் மறுத்துவிட்டார்.

பாகிஸ்தானிய அதிகாரி ஜெனரல் மொகமட் அஸிஸ்கானி எதிர்வரும் செப்ரெம்பர் 15ம் திகதி தனது இலங்கை விஜயத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளார்.

இதேவேளை இவரின் விஜயத்தை ஒட்டி இந்திய கடற்படை தளபதியின் இலங்கை விஜயம் பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழ்-முஸ்லிம் எம்.பிகள் இன்று பிரதமர் ரணிலைச் சந்திப்பர்!

(கொழும்பு)

கிழக்குமாகாண நிலைமைகள் தொடர்பாகத் தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் பராளுமன்ற உறுப்பினர்களும் இன்று திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

கிழக்கு மாகாணப் பாதுகாப்புக்கென முஸ்லிம் இளைஞர்களைப் பொலிஸ்படைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிகள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற அதேவேளை. முஸ்லிம் எம்.பிகள் ஆட்சேர்ப்பு அவசியம் என வலியுத்தி வருகின்றனர். இந் நிலையில் மேற்படி இழுபறி நிலைக்கு இணக்கப்பாடு ஒன்றைக் காணும் முகமாக கடந்த 27-ம் திகதி அலரிமாளிகையில் பிரதமருடன் நடந்த சந்திப்பு முடிவெதுவும் எட்டப்படாத நிலையில் முடிவுற்றது.

அச் சந்திப்பில் இன்றைய தினம் மீண்டுமொரு சந்திப்புக்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இன்று அலரிமாளிகையில் தமிழ்-முஸ்லிம் எம்.பிகள் பிரதமரைச் சந்தித்துப் பேசவுள்ளனர். (த)

# சமஷ்டி அரசியலமைப்பின் முதற்படியே

# இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை

## வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சிற்றம்பலம் கருத்து

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக தமிழ் மக்களிடம் இருந்து இனவாதிகளால் பறிக்கப்பட்டு வந்த அரசியல் உரிமைகளை மீட்பதற்காக, தமிழ் மக்கள் மேற்கொண்ட விடுதலைப் பயணத்திற்கு மாற்றீடாக ஓர் சமஷ்டிமுறை அரசியல் முன்வைக்கப்படுதல் அவசியமானதாகும்.

இவ் அரசியலின் முதற்படியாக தமிழர் தரப்பின் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை அமைகிறது.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக



பட்டப் பின்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

சுண்டிக்குளியில் அமைந்துள்ள சர்வோதய நிறுவனத்தின் யாழ் மாவட்ட அலுவலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற "சுதந்திரமானதும் நீதியானதும் தேர்தலுக்கான மக்களின் செயற்பாடுகள்" எனும் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'பவ்ரன்' நிறுவனத்தின் ஆதரவில் சர்வோதயத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் க.கனகரட்ணம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகள் யுனிசெவ் நிறுவனப் பிரதிநிதிகள், மற்றும் சமூகப் பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

### ஒற்றை ஆட்சி

கடந்த 50 ஆண்டுகளாக இலங்கையில் நடைபெற்றுவரும் ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பானது, தந்திரமான முறையில் சிங்கள இனத்தவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

பெரும்பான்மை சிங்கள இனத்தவர்கள் பாராளுமன்றத்தில் தமது பிரதிநிதித்துவத்தை பலப்படுத்தி தமது கையில் அரசியல் அதிகாரத்தை வைத்திருக்கும் வகையிலேயே ஆட்சியை அமைத்துள்ளனர்.

இத்தகைய ஒரு வர்க்க நலன் பேணும் அரசியலில், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் ஒரு போதும் பூர்த்தி செய்யப்படமாட்டாது.

இதனாலேயே விடுதலைப் போராட்டத்தைத் தொடர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது.

இந்தப் போராட்டத்தில் 17ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளை நாம் இழந்துள்ளோம் அது மாத்திரமன்றி இலட்சக் கணக்கான பொது மக்களைப் பலி கொடுத்துள்ளோம். மேலும் இடப் பெயர்வுகள்,சொத்தழிவுகள் என நாம விடுதலைக்கு கொடுத்த விலை அதிகமானதாகும்.

### இடைக்கால நிர்வாகம


இத்தனைக்கும் ஓர் மாற்றீடாக, தமிழர் தாயகப் பிரதேசமான வடக்குக் கிழக்கில், சுயநிர்ணய உரிமை, மரபு வழித் தாயகம், சுயாட்சி அதிகாரம் என்பவற்றைத் தன் நாம் தனித் தேசிய இனமென அழைக்கின்றோம்.

எம்மை நாமே ஆளுகின்ற அதிகாரம் எமக்கு வேண்டும். இதற்கு ஓர் முன்னோடியாகவே தற்போது தமிழ் மக்கள் இடைக்கால நிர்வாகத்தை கோரி நிற்கின்றனர்.

இவ்வாறு தமிழ் மக்கள் கோருவதற்கும் பல காரணங்கள் உண்டு. ஆரம்ப காலங்களில் எத்தனையே உடன்படிக்கைகள் எழுதப்பட்டன. ஆனால் அவை மறுகணமே கிழித்து எறியப்பட்டன.

இவற்றால் ஏற்பட்ட அதிருப்தியே இலங்கையில் போர் வெடிக்கக் காரணமாக அமைந்தது.

இதற்கு அடிப்படைக் காரணம்



சிங்களவர் கையில் பலம் மிக்க அதிகாரம் இருந்தமையே ஆகும்.

இதனை அவர்கள் விட்டுக் கொடுப்பு, தமிழ் மக்களின் உரிமைகளையும் மதிக்காமையினாலேயே சிங்கள் ஆட்சியை தமிழர்கள் ஏற்க மறுத்தனர்.

### தனித்துவமான போராட்டம்

தமிழரது போராட்டம் தனித்துவமானது. எமது முன்னைய தலைவர்களினால் முன்வைக்கப்பட்ட சமஷ்டிக் கோரிக்கைகள் அரசினால நிராகரிக்கப்பட்டதாலேயே தனித் தமிழழும் என்ற இலக்கில் விடுதலைப் போராட்டம் உக்கிரம் அடைந்தது.

இதன் விளைவு ஆயுதப் போர் பலம் பெற்றது. இதனை முறியடிக்க முடியாத அரசாங்கம் தமிழ்த் தரப்பினரை பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளது.

இந்த வேளையில் விடுதலைப் புலிகள் எல்லாவற்றையும் செய்து முடிப்பார்கள் என்று முழுப்பாரத்தையும் அவர்கள் மீது இறக்கி வைக்காது அவர்களுக்கு தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களும் பொது மக்களும்

(10ம் பக்கம் பார்க்க)


## உங்கள் வலம்புரியின் வாரமலர்




விலை ரூபா 14.00

## சங்குநாதம்

- பேரினவாதத்தின் எதிர்ப்பலையை எதிர் கொள்வாரா பிரதமர் -பவானி
- கிழக்கில் முஸ்லிம் ஆயுதக் குழு -ஜெயன்
- சொந்த மண்ணைப் பார்க்க வந்தவர்கள் வாகன விபத்தில் பலியான சோகம். -டொறிங்ரன்
- கருவிலே கலைந்து போன ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி கூட்டு. -விதுரன்
- வியாசரின் பதில்கள்.
- செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
- பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 20 விலை :-14.00

சங்கு நாதம்

(08-14 செப் 2003) Sankunatham

## இன்று ஒரு தகவல்

# பயம்

நள்ளிரவு நேரம் கும்மிருட்டு. அப்போது வீட்டுத் தோட்டத்தில், ஒரு சிறுவன் அமர்ந்திருக்கின்றான். வானத்தை அண்ணாந்து பார்த்து அழகாக ரசித்துக் கொண்டிருக்கிறான். தன்னைச் சுற்றி இருளாக இருக்கின்றதே என்ற எண்ணம் கூட அவனுக்கு இல்லை.

இந்த நேரத்தில் மகனைக் காணவில்லையே என்று அவனது தாயார் தேடி அலைகின்றார். எங்கெல்லாமோ தேடி விட்டுத் தோட்டத்திற்கு வந்தார். இவன் ஓர் கல்லின் மீது அமர்ந்து கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்து அழகாக இரசித்துக் கொண்டிருக்கின்றான். " ஐயையோ! இந்த நேரத்தில் இங்கு வந்து இப்படி இருட்டிலே உட்கார்ந்திருகின்றாயே! உனக்கு பயமாக இல்லையா? என்று கேட்டார் தாயாா"

அப்போது அந்தச் சிறுவன் தனது தாயாரிடம் கேட்கின்றான் " பயமா? அப்படி என்றால் என்ன?" என்று கேட்டான். ஆக இது வரையில் அந்தப் பயம் என்னும் உணர்ச்சியைத் தனது மனதில் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படி ஒன்றிருப்பதாகவே அவன் நினைத்துப் பார்க்கவில்லை. அதனை நினைத்துப் பார்க்காத வரை மனிதன் இயல்பாகவே இருக்கலாம். தானாகவே இந்த உணர்ச்சியை வளர்த்துக் கொள்வதனால்தான் சிக்கல்கள் தோன்றுகின்றன என்று மனோதத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

அந்தச் சிறுவன் யார் தெரியுமா? பின்நாளில் மாவீரன் நெப்போலியன் எனப் புகழப்பட்டவர் தான்! சிறு குழந்தைகளாக இருக்கும் போது அவர்களை இங்கு செல்லாதே, அங்கு செல்லாதே என்று நாமாகவே பயமுறுத்தி அவர்களைக் குறித்த ஒரு வட்டத்திற்குள் தள்ளி விடுகிறோம். அப்படிச் செய்வது தவறு என்று கூறுகின்றனர்.

உண்மையாகவே பயப்படவேண்டிய சில விடயங்களைத் தவிர்த்து விட்டு, தேவையற்ற கற்பனைப் பயங்கள் அதிகமாக இருக்கும். உள் பயம் என்று கூறுகின்றார்கள் அல்லவா? இந்த உள் பயம் வந்து விட்டால் தம்மை அறியாமலேயே உணர்ச்சி வசப்படுவார்கள். உடல் வியர்க்கும், நடுங்கும், கண்களிலிருந்து கண்ணீர் வரும். இது தேவையில்லாமல் அவர்கள் வளர்த்துக்கொண்ட ஓர் உணர்ச்சி..

சிலருக்கு ஏணிப்படிகளில் ஏறுவதற்குக் கூட பயமாக இருக்கும். சிலருக்கு மாடிப்படி ஏறுவதற்கு பயமாக இருக்கும். இன்னும் சிலருக்கு உயரத்திலிருந்து கீழே பார்ப்பதற்குப் பயமாக இருக்கும். சிலருக்குத் தனியாக இருக்கப் பயமாக இருக்கும். இப்படியும் சிலர் இருக்கின்றனர். பிரச்சினை ஏதுவும் இருக்காது! இருந்தாலும் இவர்கள் தனியாக இருக்கப் பயப்படுவார்கள். சிலரை வெட்டவெளியில் கொண்டுபோய் விட்டால் அதிகப் பயம் வந்து விடும். இன்னும் சிலருக்கு கத்தி போன்ற கூர்மையான பொருட்களைப் பார்த்து விட்டால் பயம். சிலருக்குக் கரப்பான் பூச்சியைப் பார்த்து விட்டால் ஒரு விதமான பயம் ஏற்படும். எலியைப்பார்த்தால் பயம். பல்லியைப்பார்த்துவிட்டால் சிலர் ஓடியே போய்விடுவார்கள்!

இது போன்ற பய உணர்ச்சிகள் மனிதனை ஆட்கொள்கினறது. இவ்வாறான சில பிரபலமான ஆட்களும் உண்டு. சிக்மன் புரொய்டுக்குப் பயணம் செய்வதென்றால் பயமாம். அதனால் இயன்ற அளவு பயணம் செய்வதை அவர் தவிர்த்துக்கொள்வாராம். அது போல் பாஸ்கர் என்று ஓர் அறிஞர். இவருக்கு வெளியில் தனியாக நிற்பதென்றால் பயம். இதற்கெல்லாம் ஏதோ ஒரு காரணம் அவர்களது உள் மனதை ஒரு சம்பவம் பாதித்திருக்கலாம். அதனால் இப்படியான பயங்கள் அவர்களை ஆட்டிப்படைப்பதாகக் கூறுவார்கள்.

இவற்றைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்றால், மனோ வலிமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதுபோல் இன்னுமொன்றும் கூறுவார்கள். அதாவது மனோ தத்துவ ரீதியில் இ.எஸ்.பி.!

நம்மிடம் இயற்கையாக பார்வை உணர்வு, செவி உணர்வு, நுகர் உணர்வு, சுவை உணர்வு, தொடு உணர்வுகள் இருக்கின்றன. இந்த 5 உணர்வுகளையும் தாண்டி இவற்றைச் சாராத புற உணர்வும் இருக்கின்றதாம். அது தான் இ.எஸ்.பி. ஏதாவது விபத்து நேர்ந்து விடுமோ என்று அவர்களாகவே கற்பனை செய்து கொண்டிருப்பார்கள். திடீரென்று ஏதாவது மிருகம்வந்து விடுமோ என்று பயப்படுவார்கள். இவையெல்லாம் மனோதத்துவ ரீதியில் அவர்களைப் பாதிக்கக்கூடிய விடயங்கள்.

ஒரு இடத்திற்கு போவதாக வைத்துக் கொள்ளுங்கள்! அந்த இடத்தைப்பற்றிய சூழ்நிலைகள் எமக்குத் தெரியாதவரை பயம் இல்லை.

ஒரு காட்டு பங்களா சுற்றுலாப்பயணிகள் அங்கு வந்து தங்கியிருந்தார்கள். அங்கிருந்த பணியாளர்கள் இவர்களுக்குத்தேவையான யாவற்றையும் செய்து கொடுத்து விட்டு " நன்றாக நிம்மதியுடன் தூங்குங்கள். நாம் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளோம். ஒரு பயமும் இல்லை" என்று கூறிக்கொண்டிருந்தனர்.

இவர்களும் மகிழ்ச்சியாகக் கேட்டுக்கொண்டிருந்தனர். இறுதியில் ஒரு பணியாளர் கூறினார்" இங்கு வேறு ஒரு பிரச்சினையும் இல்லை. 6 மாதத்திற்கு முன்பு இங்கு ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகப் பேசிக்கொள்கின்றார்கள்" என்றார்.

அதற்குப் பிறகு இவர்களால் நிம்மதியாக உறங்க முடியுமா?

*இளசை சுந்தரம்*

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்

# போராட்டத்திற்கு தேசிய டிப்ளோமாதாரிகள் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்விப் பணிமனைக்கு முன்பாக இவ்வாண்டின் 3ஆம் தவணை தொடக்கம் இடம்பெற்று வரும்போராட்டத்திற்கு எமது ஆதரவு என்றும் உண்டு.

இவ்வாறு தேசிய டிப்ளோமாதாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவ்வறிககையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலக மயமாக்கல், ஆங்கில மொழிக்கல்வியூடாக மாணவர்களை சர்வதேச தரத்திற்கு இட்டுச் செல்லல போன்ற நோக்கங்களுடன் உலக நாடுகள் யாவும் முன்னேறிக் கொண்டிருந்த கடந்த காலப்பகுதிகளில் யுத்த மேகம் சூழ்ந்து, அடிப்படைக் கலவி வசதிகள் மறுக்கப்பட்டு இருண்டயுகமொன்றினுள் வாழ்ந்து கொண்டிருநத வடக்கு-கிழக்கு மாகாண மாணவர்களின் ஆங்கிலக் கல்வி அறிவை உயர்த்துவதற்காக மிகக்குறைந்த ஊதியமாக நாள் ஒன்றுக்கு 80 ரூபா வீதம் பெற்று இவர்கள் ஆற்றிய அர்ப்பணமிக்க சேவையை எவராலும இலகுவில் மறந்துவிட முடியாது.

ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து ஆசிரியர்களை இறக்குமதி செய்வதறகான நடைமுறைச் சாத்தியமற்ற வழிகளை யோசித்துக் கொண்டிருக்கின்ற அரசாங்கமும், கல்வி அதிகாரிகளும் இவர்களைப் பற்றி எண்ணிப பாராதது வேதனைக்குரியதாகும்.

எனவே பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களை நிரந்தர ஆசிரிய சேவையில் உள்ளீர்ப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் உடன்எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் தாழமையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிகதப்பட்டுள்ளது.

(க-261)

## இராசி பலன்

**08. 09. 2003**

**(ஆவணி 22, திங்கள்)**

திரியோதசி- மு. இ. 11.11 வரை
திருவோணம் - பி.ப. 3.59 வரை
இராகுகாலம் - 7.34 - 09.04
சுபநேரம் - 12.04- 01.34
அமிர்தம் பிரதோஷ விரதம்

**மேடம்**
அதிக பிரயாசை, நணபர் உதவி, நல்ல சம்பவம், காரிய அனுகூலம்.

**இடபம்**
புதிய திருப்பம் நீர்ப்பந்தம், பிரயாணம், முயற்சி தாமதம்.

**மிதுனம்**
எதிர் பாராத அச்சம், பிரயாண தடங்கல், உடல் வியாதி, போசன சுகம்.

**கடகம்**
குடும்ப மகிழ்ச்சி, நல்லவரவேற்பு, செய்தொழில் விருத்தி, வருமானம அதிகரிக்கும்.

**சிங்கம்**
இலட்சுமிகரம், தேக நலன், தொழில் முன்னேற்றம், காரிய அனுகூலம்.

**கன்னி**
பிறருக்கு உதவுதல், முயற்சி தாமதம், வியாபார நன்மை, பிரயாண இடையூறு.

**துலாம்**
உடல் நலக்குறைவு, மாணவர் கல்வியில்ஆர்வம், பகைவர் நட்பு, மனச்சஞ்சலம்.

**விருச்சிகம்**
கூட்டு முயற்சி, நல்ல வருமானம், சகோதரர் வழி நன்மை, வாக்கு மேன்மை.

**தனுசு**
கௌரவக்குறைவு, அதிக செலவு, கடும் வாதம், மாதர் நட்பு.

**மகரம்**
நல்ல முயற்சி, பிறருக்கு உதவுதல், சயன சுகம், புதிய பொருள் சேர்க்கை

**கும்பம்**
பிரயாண அலைச்சல், அதிக செலவு, திருடர் பயம், காரியதாமதம்.

**மீனம்**
நண்பர் சந்திப்பு, பொருள்வரவு, காரிய நன்மை, பெருமை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# சாவல்கட்டு கிராமத்துக்கு 5 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்

## பா.உ. ரவிராஜ் உறுதிமொழி

(சுதுமலை)

அடுத்த வருடம் கிடைக்கவுள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து சாவல்கட்டுப் பகுதியின் அபிவிருத்திப் பணிகளுக்கென 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக தமிழர்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

சாவல்கட்டு மகாத்மா சனசமூக நிலையமும், விளையாட்டுக் கழகமும் இணைந்து நடாத்திய விளையாட்டுப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் நிலையத்தலைவர் கே. ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து கூறுகையில், சனசமூக நிலையங்கள் தமது கிராமப் பகுதிகளில் உள்ள இளைஞர், யுவதிகளின் திறமைகளை இனங்காண்பதற்கு இவவாறான விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவது மிகவும் அவசியமானது.

ஆனால், யாழ்ப்பாணத்தில் இன்று பல சனசமூக நிலையங்கள் செயற்பாடுகள் எதுவுமின்றி பத்திரிகை வாசிப்பதற்கு மட்டுமே பயன்படுகின்றது.

சாவல்கட்டு கிராமம் மழை காலங்களில் வெள்ள நீர் தேங்கி மக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்துவதாகவும், வீடுகளில் வெள்ளம் புகுவதனால் மக்கள் இடம் பெயர்ந்ததாகவும் அறிந்தேன்.

அத்துடன், 250ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மலசலகூட வசதிகள் இல்லாமலும் குடிநீர் வசதியுமின்றி இருப்பதாகவும் அறிந்தேன்.

இவர்களுக்கு இவ் வசதிகளைச் செய்து கொடுப்பதுடன், இளைஞர், யுவதிகளுக்கு ஆரம்பத் தொழில் பயிற்சிகளை வழங்குவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படும் என்றார்.

மேலும் மீனவக் குடும்பங்களின் வளர்ச்சிக்கும் தன்னால் இயன்ற அளவு உதவி புரிவதாகவும் உறுதியளித்தார்.

(பி-252)

## ஊழியர் நம்பிக்கை நிதிய

# அனுகூலங்களைப் பெற அங்கத்தவர்கள் ஆர்வமில்லை

(கொழும்பு)

பெருமளவு அனுகூலங்களை ஊழியர் நம்பிக்கை நிதியம் அதன் அங்கத்தவர்களுக்கு வழங்கி வருகின்ற போதிலும் மிகக்குறைந்த எண்ணிக்கையான அங்கத்தவர்களே இந்த அனுகூலங்களுக்காக விணணப்பிக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு அங்கத்தவரும் தலா 1 இலட்சத்து 50 ஆயிரம்ரூபா பெறுமதியான காப்புறுதியை இலவசமாகப் பெற்றுக்கொள்ளமுடியும். இருதயம் மற்றும் சிறுநீரகம் போன்றனவற்றின் சத்திரசிகிச்சைக்கென 1 இலட்சம் ரூபாவை இலவசமாக ஒவ்வொரு அங்கத்தவரும் பெற்றுக் கொள்ள முடியும். அதேவேளை, 25 ஆயிரம் ரூபா பணம் வைத்திய சிகிச்சைச் செலவுகளுக்காக நிதியத்தால் வழங்கப்பட்டு வருகின்றது என ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நிர்வாகத்துறை முகாமையாளர் திருமதி. அசோகாமினி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது பற்றிக் கருத்துக்கூறுகையில்,

வைத்திய உதவிக்கென சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை ஆராயவதற்கென நாரஹேன்பிட்டி தொழில் செயலகத்தில் உள்ள ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் தலைமை அலுவலகத்தில் புதிய ஒரு பிரிவு தனியாக அமைக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், சிறுநீரகம் மற்றும் இருதய சத்திரச்சிகிச்சைக்கான விணப்பங்கள் சத்திரசிகிச்சை செய்யப்படும் தினத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் ஊழியர் நம்பிக்கை நிதியததில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என திருமதி அசோகாமினி விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-18)

# விவசாயத்துறை மூலம் நாட்டை அபிவிருத்தி செய்வது சிரமமானது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

விவசாயத்துறையின்மூலம் மாத்திரம் நாட்டை அபிவிருத்தி செய்வது சிரமமானது. நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு துறையிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசிமான தொன்றாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை நெடுஞ்சாலைகள் அமைச்சின் திட்டமொன்றை மொனறாகலையில் பார்வையிட்ட பின் கருத்துத்தெரிவிக்கையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டின் வீதி வலயமைப்பைப் புனர் நிர்மாணம் செய்வதன் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கான துரித நடிவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

அத்துடன், வட-கிழக்கு உட்பட நாடுமுழுவதும் தற்போது வீதி அமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன், வவுனியா- யாழ்ப்பாண நெடுஞ்சாலை வெளிநாட்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் தற்போது திருத்தி அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-18)

# பலஸ்தீனப் பிரதமர் பதவி துறந்தாலும்

# அமைதித் திட்டத்தில் அமெரிக்கா உறுதி

## அப்பாஸை ஆதரிக்கும்படி தலைவர்களுக்கு ஆலோசனை.

(வாஷிங்டன்)

**பலஸ்தீனப் பிரதமர் முஹமட் அப்பாஸ பதவி விலகியுள்ள போதும், ரோட் மாப் (Road map) என்ற மேற்காசிய அமைதித் திட்டத்தில் இன்னமும உறுதியாக இருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது.**

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்துடன் பல மாதங்களாக இருந்து வந்த உட்பூசல்களையடுத்து பிரதமர் அப்பாஸ் நேற்று முன்தினம் பதவி விலகினார்.

பாதுகாப்புவிடயங்கள் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும் என்ற விடயத்தில் பலஸ்தீன அதிபருக்கும் பிரதமருக்கும் இடையில் பூசல்கள் நிலவின.

காபந்து அரசில் இன்னும் நீடித்திருக்கும் அப்பாஸை தொடர்ந்தும் ஆதரிக்குமாறு பலஸ்தீனத் தலைவர்களை வாஷிங்டன் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, பதவி விலகியுள்ள பிரதமர் அப்பாஸ், இஸ்ரேலும், அமெரிக்காவும் மத்தியகிழக்கு முயற்சிகளை ஆதரிக்கும் விடயத்திலிருந்து தவறிவிட்டன என்று குறை கூறியுள்ளார்.

பலஸ்தீனர்களின் தீவிர சமயத் தலைவா ஒருவரைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேலின் முயற்சியை அடுத்து, ஹமாஸ் அமைப்பு பதில் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் காரணமாக இஸ்ரேலியப் பொலிசார் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பேருந்து நிறுத்தங்கள் மற்றும் முக்கிய இடங்களில் கூடுதல் பாதுகாப்புப் படைகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்றும், ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டு முக்கிய நகரங்களின் நுழைவாயில்களில் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்படுவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### அரபாத் தலைமையில் ஹமாஸ் அமைப்பின் விசேட கூட்டம்

பலஸ்தீன ஜனாதிபதி யஸீர் அரபாத்தின் தலைமையிலான கமாஸ் அமைப்பின் பிரதான தலைவர்களின் முக்கிய கூட்டம் ஒன்று மிகவிரைவில் நடைபெறவுள்ளது.

பிரதமர் முஹமட் அப்பாஸின் இராஜினாமாவையடுத்து அமைச்சரவையை எவ்வாறு நடத்துவது என்பது குறித்து இக்கூட்டத்தில் விசேடமாக ஆராயப்படவுள்ளது.

புதிய பிரமர் ஒருவர் நியமிக்கப்டும்வரை பொறுப்பான ஒருவரின் தலைமையின் கீழ் அமைச்சரவை தொடர்ந்தும் இயங்குமென பலஸ்தீன உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அப்பாஸின் இராஜினாமாவை அதிபர் யஸீர் அரபாத் அங்கீகரித்துள்ளமை தொடர்பான முடிவுகள் எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

### இஸ்ரேல் தாக்குதலுக்கு ஆன்மீகத் தலைவர் இலக்கு

காஸாப்பகுதியில் இருக்கின்ற கமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவர் ஷேக் அகமட் யஸீரின் வீட்டின் மீது இஸ்ரேல் விமானப் படை ஏவுகணைத் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் ஆன்மீகத் தலைவர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினார்.

### அமெரிக்கா வேண்டுகோள்

மத்திய கிழக்கில் அமைதியை நிலைநாட்ட அனைவரும் முன்வர வேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

பலஸ்தீனப் பிரதமர் தமது பதவியை இராஜினாமாச் செய்துள்ளதையடுத்தும், இஸ்ரேல் ஆன்மிகத் தலைவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தியதையடுத்தும் அமெரிக்கா இநத வேண்டுகோளை விடுத்துள்ளது.

பலஸ்தீனத்தில் இடம்பெற்றுள்ள இச்சம்பவங்கள் மூலம் அங்கு மீண்டும் வன்முறைகள் வெடிக்கும் அபாயம் நிலவுவதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. (பி-2)

# தாய்வான் என்ற பெயரை மாற்றுவதற்குக் கடும்எதிர்ப்பு

## மக்கள் அணிதிரண்டு ஆர்ப்பாட்டம்

(தைபீ)

தாய்வான்ன சீனக்குடியரசு என்று கூறி வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடித் தலைநகர் தைபீயில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

தாய்வான் என்ற பெயரே தங்களது நாட்டுக்கு தொடர்ந்தும் இருக்கவேண்டும் என்று கோரி இந்தப் போராட்டம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

தாய்வான்தேசம், தாய்வான் மக்கள் என்ற அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் அமைப்பில் தங்கள் நாடு இருக்வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமெழுப்பியுள்ளனர்.

தைபீ நகரிலிருந்து இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி அலுவலகம் வரை ஊர்வலம் ஒன்றையும் நடத்தியுள்ளனர்.

இந்த ஊர்வலத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள் என ராய்ட்டர் செய்திகள் கூறுகின்றன. (பி-2)

# மாயாவதியின் கட்சியில் மீண்டும் பிளவு

(சென்னை)

உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சர் மாயாவதியின் பகுஜன் சமாஜிக் கட்சியில் பிளவு ஏற்படுவது உறுதியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கட்சியில் மாயாவதிக்கு எதிரானவர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த 40 சட்டசபை உறுப்பினர்களும் ஆளுநர் கேசரி நாத்திரிபாயை சந்தித்துத் தமது நிலைமையை தெளிவுபடுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் உத்தரப்பிரதேச சட்டப்பேரவையின் முதல்வர் மொனாயன்சிங்யாதவ் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பொன்றையும் கோரவுள்ளார். (பி-2)

# ஈராக் போர் வீராங்கனையின் கதை புத்தகமாகிறது

(நியூயோர்க்)

ஈராக் மீதான அமெரிக்கப் படையெடுப்பின்போது, ஈராக்கியரால் கைது செய்யப்பட்டு பின்னர் அமெரிக்கப் படையினரால் சாதுரியமாக மீட்கப்பட்டவரான ஜெஸிக்கா லிஞ்ச் என்ற முன்னாள் படை வீராங்கனை தனது கதையைப் புத்தகமாக வெளியிட ஒரு மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்.

அல்பிரட் குனொப் என்ற வெளியீட்டாளர் இந்த ஒப்பந்தத்தை ஜெஸிக்கா லிஞ்சுடன் செய்துள்ளார்.

''நான் ஒரு போர் வீராங்கனையாகவும் இருந்தேன்'' என்ற தலைப்பிலான இந்த நூலில் ஜெஸிக்கா தமது கதையைத் தாமே கூறுவது போல் அமைந்திருக்கும். முன்னாள் நியூயோர்க் ரைம்ஸ் நிருபர் றிக்பிராக் இக்கதையை எழுதுவார்.

ஒரு சிறிய நகரச் சிறுமி ஈராக்கில யுத்தத்திற்குச் செல்கிறாள் பின்னர் தேசிய விராங்கனையாக நாடு திரும்புகிறாள் இதுதான் அப்பெண்ணின் கதை.

கதையை எழுதும் றிக்பிராக்கிற்கும், லிஞ்ச் குடும்பத்திற்கும் வெளியீட்டாளர் ஒரு மில்லியன் டொலர் வழங்குவார். புத்தகத்தை உருவாக்குவதற்காகவும் பிராக்கிற்குப் பெரும் தொகை வழங்கப்படும்.

லிஞ்ச் குடும்பத்திற்கு முற்பணத்தின் ஒரு பகுதியும், புத்தகத்திற்குரிய முழு ''றோயல்ரி'' யும் வழங்கப்படும்.

ஈராக் யுத்தத்தில் காயமடைந்துள்ள 20 வயதான ஜெஸிக்கா லிஞ்ச் இராணுவதில் இருந்து கடந்தவாரம் கௌரவமாக விடுவிக்கப்பட்டார்.

மார்ச் 23 ஆம் திகதி ஈராக்கியப் படைகளால் பிடிக்கப்பட்தை அடுத்து லிஞ்ச் அமெரிக்க தேசப் பற்றின் சின்னமாகக் கருதப்பட்லானார்.

ஈராக்கில் நஸீரியா நகருக்கு அருகில் நடைபெற்ற சம்பவத்தில் 11 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டு 9 பேர் காயமுற்றிருந்தனர்.

ஏப்ரல் 1ஆம் திகதி அமெரிக்க அதிரடிப் படைகள் ஈராக்கிய ஆஸ்பத்திரி ஒன்றில் இருந்து லிஞ்சை விடுவித்தார்கள். யூலை 22ஆம் திகதி மேற்கு வேர்ஜீனியாவில் உள்ள தனது சொந்த ஊருக்கு அவர் திரும்பிய போது அங்கு ஒரு வீரருக்குரிய மரியாதையுடன் அவர் வரவேற்கப்பட்டார். (பி-2)



நேற்று முன்தினம் மெரீனா கடற்க்ரையில் இடம்பெற்ற இந்திய விமானப்படைத்துறை வீர வீராங்கனைகளின் விமான சாகச நிகழ்வின் ஒரு காட்சியையே இங்கு காண்கிறீர்கள். இக் காட்சியைக் காண்பதற்கு பல இலட்சம் அப்பகுதியில் திரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா.சபைப் பொதுக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் உரையாற்றுவார்

(புதுடில்லி)

எதிர்வரும் 25 ஆம் திகதி இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றவுள்ளார்.

இம்மாதம் 19 ஆம் திகதி நியூயோர்க் செல்லவிருக்கும் அவர் அமெரிக்காவில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குகொள்ளவுள்ளார்.

இந்தமாத பிற்பகுதியில் நடைபெறவுள்ள ஐக்கியநாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாயுடன், பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உட்படப் 19 பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது, பிரதமர் வாஜ்பாய் அமெரிக்க அதிபர் புஷ்ஷை சந்தித்து இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

தனது அமெரிக்கப் பயணத்தை முடித்துக்கொண்டு 26 ஆம் திகதி .இவர் நாடு திரும்புவார் என தெரிவிக்கப் படுகிறது. (பி-2)

## தாக்குதல் நடத்த முயன்ற இரட்டைச் சகோதரிகள் உட்பட மூவர் மொராக்கோவில் கைது

(ராபர்ட்)

இரட்டைச் சகோதரிகள் உட்பட மூன்று பெண்கள் மொராக்கோ தலைநகர் ராபர்ட்டில் தற்கொலைத் தாக்குதல் நடத்த முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதனையடுத்து சந்தேகத்தின் பேரில மேலும் 8 பேரை தாம் கைது செய்துள்ளதாக மொராக்கோப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும், இவர்கள் எங்கு என்ன நோக்கத்திற்காக் தற்கொலைத் தாக்குதல், நடத்த முயற்சித்தார்கள் என்பது குறித்த மேலதிக விபரங்கள் எதனையும் பொலிஸார் தெரிவிக்கவில்லை. (பி-2)

## பாகிஸ்தானில் மின்னல் தாக்கி 27 பேர் பலி

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் மின்னல் தாக்கியதில் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் இருந்து 190 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள திர் மாவட்டத்திலேயே மின்னல் தாக்கி இவர்கள் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஒருவார காலமாக அந்த மாவட்டத்தில் பல தடவைகள் மின்னல் தாக்கியதாகவும், இதனால், பல வீடுகள் சேதமடைந்ததாகவும் ராய்ட்டர் செய்திகள் தெரிவிக்கின்றன. (பி-2)

## சுகாதாரசேவை ஊழியர் பிரச்சினை

# மீண்டும் தலைதூக்கும் ஆபத்து

(கொழும்பு)

சுகாதார சேவையில் நிலவி வந்த சம்பள முரண்பாடுகள் தொடர்பான பிரச்சனை மீண்டும் தலைதூக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

காணி அமைச்சர் ராஜித சேனாரட்ணவுடன் தொழிற்சங்கக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அமைய, அவை நடைமுறைபடுத்தப்படாமல் விடலாம் என்ற சந்தேகக் கருத்துக்கள் எழுந்துள்ளதனால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மாத முதல் இருவாரங்களுக்குள் சுகாதாரசேவை ஊழியாகளின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என பேச்சுவார்த்தையின் போது காணி அமைச்சர் உறுதியளித்திருந்தார்.

எனினும், இச்சம்பள முரண்பாட்டுக்கு இரண்டு வாரங்களுக்குள் தீர்வுகாணமுடியாதென திறைசேரி கூறியுள்ளதை அடுத்து இந்நிலை ஏற்பட்டுள்ளது. (தி)

## ரூ. 30 இலட்சம் வெற்றி பெற்றவரின்

# கொலை தொடர்பான மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது

(கொழும்பு)

யூன் மாத அதிர்ஷ்ட லாபச் சீட்டில 30 இலட்ச ரூபாவை வெற்றியீட்டியவரான சுனில் ஹேமச்சந்திரா கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அவரின் தாயாரும் சகோதரியும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தல் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துள்ளது. மேற்படி நபரை சித்திரவதை செய்து அவரின் மரணத்திற்கு காரணமான மொரஹஹேன, பொலிஸ் கான்ஸ்டபிள் முத்துப்பண்டா, மகிபால, விஜயமானே ஆகியோருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்க்ளுக்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் ஒழுக்கவியல் நடவடிக்கை எடுப்பதற்கு பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உத்தர விடுமாறும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன்; நஷ்டஈடாக 3 மில்லியன் ரூபா தரும்படியும் நீமன்றத்தை கோரியுள்ளனர். (க-06)

# கனரக வாகன சாரதிகளுக்கு வருடாந்தப் பரீட்சை

(கொழும்பு)

கனரக வாகன சாரதிகள் அனைவருக்கும் வருடந்தோறும் தகைமை காண்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடளாவியி ரீதியில் இத்திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது.

வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கும்,சாரதிகள் மத்தியில் ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்குமே இத்திட்டம் விரைவில் அமுல்படுத்தப் படவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் காமினி ஹேமயாப்ப தெரிவித்தார்.

இத்திட்டத்தின் படி அரசு வருடந்தோறும் நடத்தும் கனரக வாகன சாரதிகளுக்கான தகைமைகாண் பரீட்சைக்கு சாரதிகள் கட்டாயம் தோற்றவேண்டும்.

60 வயதிற்கு மேற்பட்டவர்களும் இவ்வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரங்களை ஒவத்திருப்பதால், இத்தகைய தகைமை காண் பரீட்சைகள் நடத்தப்படுவ்து அவசியம் என அவர் மேலும்தெரிவித்தார். (தி)

## லெபனானில் பணியாற்றும்

# இலங்கையர் நலன் குறித்து ஆராயக் குழு அமைப்பு

(கொழும்பு)

லெபன்னானில் வேலை செய்யும் இலங்கைப் பணியாளர்களின் நலன் பற்றி ஆராய்வதற்கெனப் புதிதாக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

லெபனான் தொழில் அமைச்சர் ஆஷான் ஹர்பானுக்கும் வெளிநாட்டு அமைச்சர் டிரோன் பெர்னாண் டோவிற்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேச்சுவார்தைகளின் போது மேற்படி குழு அமைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்திற்கு லெபனான் அரசும் அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பேச்சுவார்த்தையின் போது, லெபனானில் பணிபுரியும் இலங்கைப் பணியாளர்களை மீண்டும் தாயகம் அழைத்து வருவது குறித்தும், அவர்கள் லெபனானில் படும் இன்னலகள் குறித்தும் விரிவாக இரு அமைசசாகளும உரையாடியுள்ளனர்.

இனிவரும் காலங்களில் மேலதிக வேலைவாய்ப்புகள் பலவற்றை லெபனானில் வழங்கும் சாத்தியம் உருவாக்கப்படும் என லெபனான் தொழில் அமைச்சர் ஆஷான் ஹர்பான் உறுதியளித்துள்ளார்.(உ-18)

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மனித உரிமைகள் பாடம் புகட்டல்

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான பாடங்கள் கற்பிக்கப்படவுள்ளன.

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இது தொடர்பாக நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளது.

பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜாவுக்கும் ஆணைக்குழு அதிகாரிகளுக்கும் இடையே இது சம்பந்தமான பேச்சுக்கள் ஏற்கனவே நடைபெற்றுள்ளன.

பொலிஸ் பாதுகாப்பில் இருந்த விளக்கமறியல் கைதி ஒருவர் இறந்ததையும் பொலிஸ் அதிகாரிகளினால் சிறைக்கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் தாக்கப்பட்ட சம்பவங்களையும் அடுத்து இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளிடையே மனித உரிமைகள், விளக்க மறியலில் உள்ள கைதிகளின் உரிமைகள் பற்றி போதிய விளக்கமின்மையே இச்சம்பவங்கள் ஏற்படுவதற்கு காரணம் என தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (தி)

# நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சமுர்த்தி புலமைப்பரிசில் திட்டத்திற்கு 2கோடியே 52 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 3 ஆயிரம் மாணவர்களுக்கு மாதாந்தம் தலா 350 ரூபா வீதம் இந்நிதி வழங்கப் படவுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டுமுதல் இப்புலமைப்பரிசில் நிதி 250 ரூபாவாக வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

(தி)

# செய்தித் துளிகள்

## முன்பள்ளி திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கியூடெக் நிறுவனத்தால் வட்டக்கச்சி செபஸ்ரியன் ஆலய வளாகத்தில் கட்டப்பட்ட முன்பள்ளி ஒன்று, மேற்படி ஆலய பங்குத்தந்தை அருட்திரு அகஸ்ரியன் தலைமையில கடந்த முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. (க-43)

## ச.ச.நிலையப் புனரமைப்புக்கு நிதி

(கொழும்புத்துறை)

கடந்தகால யுத்தத்தினால் தரை மட்டமாக்கப்பட்ட கொழும்புத்துறை மத்தி சென்றேசியன் சனசமூக நிலையத்தைப் புனரமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் 3 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக 50ஆயிரம் ரூபாவை அமைச்சர் அண்மையில் நிலையத் தலைவரிடம் கையளித்துள்ளார். (உ-51)

## இரு ச.ச.நிலையங்கள் இயங்கவில்லை

(நவற்கிரி)

அச்சுவேலி மேற்குப்பகுதியில் உள்ள இரு சனசமூக நிலையங்கள் கடந்த 4வருடங்களாக இயங்காதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றை இயக்குமாறு இப்பகுதி மக்கள் பலதடவை கோரிக்கை விடுத்திருந்த போதிலும் சம்பந்தப்பட்டவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-233)

## சுகாதாரச் சீர்கேடு கட்டுப்பாட்டுத் திட்டம்

(கொழும்புத்துறை)

கொட்டடி,நாவாந்துறை.பாசையூர் மற்றும் குருநகர் பகுதிகளில் இடம்பெற்றுவரும் சுகாதாரச் சீர்கேடுகளைக் கட்டுப்படுத்துமுகமாக யாழ். மாநகர சபை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதனடிப்படையில் யாழ்.மாநகர சபையினர் மேற்படி பகுதிகளிலுள்ள சந்தைகள்,கொல்களங்கள் ஆகியவற்றைத் துப்புரவாக்கி வருவதுடன், சந்தை மேற்பார்வையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கான சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்றையும் அண்மையில் நடாத்தியமை குறிபபிடத்தக்கது. (உ-51)

## கசிப்பு வேட்டை

(கொடிகாமம்)

கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் மதுவரி இலகாவினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட கசிப்பு வேட்டையில், நிலத்தடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கசிப்புத் தயாரிப்புக்கு பயன்படும் 210லீற்றர் கசிப்புக் கோடாவைக் கைப்பற்றியுள்ளனர்.

பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் இத்தேடுதலுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (உ-87)

## சிறந்தநடிகை விருதுபெற்றார்

(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற 28 வது சரசவிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் ''சரோஜா'', ''சின்ன தேவதை''போன்ற சிங்களத் திரைப் படங்களில் நடித்த சக்தி தொலைக்காட்சி புகழ் நித்திய வாணி கந்தசாமிக்கு 2002ஆம் ஆண் டின் சிறந்த நடிகைக்கான விருது கிடைத்துள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வருகை தந்த இந்தியத் திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் விருதுகளை வழங்கினார்.சின்னதேவதை படத்தில் நடித்தமைக்காக இவ்விருது நித்தியவாணிக்கு கிடைத்துள்ளது. விருது பெற்றவர்களில் மிகவும் வயது குறைந்த நடிகையாகவும் விளங்குகிறார்.

(பி-6)

## மின்சாரம் வழங்குவதில் இழுத்தடிப்பு

(நவற்கிரி)

அச்சுவேலி மேற்குப் பகுதிக்கு கடந்த மாதம் மின்இணைப்பு வழங்கப்பட்ட போதும் இதுவரை அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு மின்சாரம் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பகுதி வீட்டு உரிமையாளர்கள் ஏற்கனவே இதற்கான கட்டணங்களைச் செலுத்தியும்,மின்சாரம் வழங்குவதில் மின்சாரசபை இழுத்தடிப்புச் செய்வது குறித்து விசனம் தெரிவித்துள்ளனர். (உ-233)

## போலியோ சொட்டு மருந்து

(திருநெல்வேலி)

கொடிய போலியோ'நோயைக் கட்டுப்படுத்தும் வகையில் பிறந்த குழந்தை முதல் 5வயது நிரம்பிய குழந்தைகளுக்கு ''போலியோ சொட்டு மருந்து''நாடளாவிய ரீதியில் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்ட போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 20ஆம் திகதியும்,அடுத்த கட்டநிகழ்வு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதியும் நாடளாவிய ரீதியில் இடம்பெறும்

முன்பு சொட்டு மருந்து வழங்கிய குழந்தைகளுக்கும் மற்றும் மருந்து வழங்கப்படாத பிறந்த குழந்தை முதல் 5 வயது வரை [illegible] அனைத்துக் குழந்தைக[illegible] மருந்து வழங்கப்படவேண்டு[illegible]விக்கப்பட்டுள்ளது. (க-43)

## கோப்பாயில் தமிழ்விழா

(தனங்கிளப்பு)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியினர் வருடாந்தம் நடாத்தும் தமிழ் விழா கடந்த 6ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தலைவர் ஜெயகோபி தலைமையில் இடம்பெற்றது.

கலைநிகழ்வுகள் மற்றும் திருவள்ளுவர்,ஔவையார் ஆகியோரின் சிலைகள் திரைநீக்கம் செய்யப்பட்டமை சிறப்பம்சமாக விளங்கியது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ்,யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பருதி உட்பட பிரமுகர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-37)

## நூலகர் இன்றி நூலகம்

(கல்வயல்)

மீசாலைப் பகுதியில் நூலகர் இன்றி நூலகம் ஒன்று செயற்படுவதில்.நூல்களைப் பெற்றுக்கொள்வதில் பெரும் இடைஞ்சல்கள் எதிர்நோக்கப்படுவதுடன், பத்திரிகைகள் மற்றும் நூல்கள் களவாடப்படுவதற்கும் வாய்ப்புகள் உள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (க-36)

## அடிப்படை வசதியின்றி அவதி

(மருதங்கேணி)

வவுனியா வடக்கு பெரியமடு கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் எதுவித அடிப்படை வசதியுமின்றி சிரமப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 6வருடங்களின் பின் மீளக்குடியமர்ந்த 40குடும்பங்களுக்கு அரச,அரசசார்பற்ற நிறுவனங்கள் எதுவித உதவியும் செய்யவில்லையென அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.(பி-35)

## அல்லைப்பிட்டி மக்கள் சிரமம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி மத்திய பஸ்தரிப்பு நிலைய மேற்கூரை சேதமடைந்ததையடுத்து, அப்பகுதி மக்கள் பெரிதும சிரமமடைந்து வருவதாக பொது மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரபபினர் அக்கறை செலுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க)

## செயலக திறப்பு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கிளிநொச்சி அரச அதிபர் செயலக கட்டடத்திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்துவைக்கப் படவுள்ளது.

அரச மற்றும் அரச சார்பற்ற அதிகாரிகள் மற்றும் பல முக்கிய பிரதிநிதிகளும் மேற்படி நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (க-43)

## கணனிப்பயிற்சி நிலையம் திறந்துவைப்பு

((யாழ்ப்பாணம்)

யாழ்.மானிப்பாய் வீதியில் இயங்கும் யாழ்.வணிகர்கழகப்பணிமனையில் புதிய கணனிப் பயிற்சி நிலையமொன்று இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.00மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.வணிகர் கழக அங்கத்தவர்கள் அனைவருக்கும் இலவசகணனிப் பயிற்சியை வழங்கும் நோக்கில் திறந்து வைக்கப்படவுள்ள மேற்படி பயிற்சி நிலையத்துடன், வர்த்தகத் தகவல் மையம் மற்றும் நூலகம் ஆகியனவும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## நூல்கள் பகிர்ந்தளிப்பு

(சுன்னாகம்)

யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின் அனுசரணையுடன் ஜெயா புத்தக நிலையத்தால் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சியில், வலிகாமம் தெற்கு பிரதேச சபை 1லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களை கொள்வனவு செய்து, சுன்னாகம் பொது நூலகம் , உடுவில் பொது நூலகம் உள்ளிட்ட பலநூலகங்களுக்கு வழங்கியுள்ளது.

(க-104)

## நிர்வாகசபை தெரிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேசத்தின் விளையாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் நிர்வாகசபைத் தெரிவு இன்று திங்கட் கிழமை மு.ப.10.00மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இது சம்பந்தப்பட்ட ஆரம்பக் கலந்துரையாடல் ஒன்று மேற்படி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-75)

## இன்று கருத்தரங்கு

(கல்வயல்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் கடை காண் பரீட்சைக்கான வழிகாட்டல் கருந்தரங்கு சமுர்த்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளினால் இன்று திங்கட்கிழமை மு.ப.9.00 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் பங்குபற்றி பயனடையுமாறு யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் தெரிவித்துள்ளார். (க-36)

## இன்று விசேட பொதுக்கூட்டம்

(சில்லாலை)

மானிப்பாய செனற்ஆன்ஸ் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பி.ப.3.00மணிக்கு இடம் பெறவுள்ளது. இந்நிகழ்வில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கழக மேம்பாட்டுப் பிரிவினர் கலந்து கொளவர். (க-58)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)


ஊர்காவற்றுறை பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு மேற்படி பிரதேசசபைச் செயலாளர் கி.கணேசலிங்கம் தலைமையில் ஊர்காவற்றுறைப் பிரதேச அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (க-75)

# ஸ்ரீ.சு.கட்சி–ஜே.வி.பி. கூட்டு அமைக்க அழைப்பு விடுத்தால் நாம் எப்போதும் தயார்

## பிரசார செயலர் விமல் வீரவன்ச அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது நிலைப்பாட்டில் மாற்றங்களைக் கொண்டுவந்து அழைப்பு விடுத்தால் தேசிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நாங்கள் தயார் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.



நேற்றுக்காலை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

இருகட்சிகளுக்கும் இடையில் கூட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகள் இடையில் முறிவடைவதற்கு இரு பிரதான காரணங்கள் இருந்தன.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிகார பரவலாக்கலே சிறந்த தீர்வென்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுதியான நிலைப்பாடாகக் கொண்டது.

அத்துடன் இவ்வினப்பிரச்சினைத் தீர்வுக்கு நோர்வே அரசின் மத்தியஸ்தத்தை நாங்கள் நிராகரித்த போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனதுஉறுதியான நிலைப்பாட்டைக் கூறவில்லை.

இவ்விரு காரணங்கள் தொடர்பாகவும் ஜே.வி.பி கொண்டுள்ள நிலைப்பாட்டில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடனான தேசியக் கூட்டமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றபோதிலும் அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறும்.

இந்நடவடிக்கைகளுக்காக தமது கட்சி சகலகட்சிகளுடனும் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக இருக்கிறது என்றும் தற்போதைய அரசின் சமாதான நடவடிக்கைகளைத் தாம் தொடர்ந்தும் எதிர்த்து வருவதில் உறுதியாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த7 மாதங்களாக ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டமைப்பு அமைபது தொடர்பாக தொடர்ந்து நடத்தி வந்த பேச்சுவார்த்தைகள் கடந்த வெள்ளிக்கிழமை முறிவடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க.தி-10)

# புலிகளுடன் பேசுவதில் அரசு அக்கறை உலக நாடுகளின் நிதியை பெறுவதற்கே

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

சர்வதேச நாடுகளால் உறுதி அளிக்கப்பட்ட நிதியை விரைவாகப் பெறும பொருட்டே தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்க அரசாங்கம ஆர்வம்காட்டி வருகிறது என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அரசிற்கும்-தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடை பிலான பேச்சுவார்த்தைகளின் போக்கைப்பொறுத்தே டோக்கியோவில் இடம் பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்டநிதி இலங்கைக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கும் எதிர்க் கட்சிகளின் நெரக்கடிகளுக்கும் முகம் கொடுத்திருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தோதலின் போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இந் நிதியுதவியையே நம்பி இருக்கிறது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள்.

மேலும் இடைக்கால நிர்வாக சபை குறித்த தமது மாற்று யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மாத்திரமே மீண்டும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வோம் என தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்திருந்தனர் என்றும்,

இந்நிலையில் இவ்யோசனைகள் குறித்து உடன் பேச்சுகள் நடத்தப்படும் என அரசு அறிவித்திருப்பதானது ஐக்கிய தேசிய முன்னணியின் கபடத்தனத்தை வெளிக்கொணர்வதாக உள்ளதாக அவதானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (க-10)

# அம்பாந்தோட்டையில் துறைமுக ஆய்வு அறிக்கை அடுத்த மாதம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படவுள்ள சர்வதேச துறைமுகத்திற்கான முதல்கட்ட ஆய்வு அறிக்கையை அடுத்த மாதம் சமர்ப்பிக்க உள்ளதாக தென்பகுதி பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் ஆனந்த குலரட்ண தெரிவித்துள்ளார்.

கனடா அரசாங்கத்தின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் இதன் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,இந்தப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள சர்வதேச விமான நிலையத்திற்கான ஆய்வு அறிக்கை ஏற்கனவே சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் நிர்மாணப் பணிகளை விரைவில் ஆரம்பிக்க பிரதமர் உத்தேசித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-10)

# கள்ளுத் தவறணையில் வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் ஒருவருக்கு குடல் வெளிவந்தது

## புளியடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கள்ளுத்தவறணையொன்றில் இடம் பெற்ற வாய்த் தகராறு முற்றியதை அடுத்து வயிறு வெட்டப்பட்டு குடல் வெளிவந்த நிலையில் நபர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று புளியடி கள்ளுத் தவறணையில் இடம் பெற்ற மேற்படி சம்பவத்தில் பொன்னையா தங்கராசா ( வயது-28)எனும் நபரே பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருபவராவார்.

இது விடயம் தொடர்பாக யாழ்பபாணம் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது. (க-7)

# துணுக்காய் பி.தே.சபை முதலிடம்பெற்றது

(மருதங்கேணி)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான 2003 ஆண்டின் போட்டியில் துணுக் காய் பிரதேசபை முதலிடத்தைப் பெற்றுள்ளது.

சென்ற மாதம் நடைபெற்ற உள்ளூராட்சிப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற துணுக்காய் பிரதேச சபைக்கு திருகோணமலையிலுள்ள உள்ளூராட்சி ஆணையாளரினால் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பி-35)

# நிதி ஒதுக்கீடு

(கந்தரோடை)

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை உயரப்புலம் யாவில் வீதி மற்றும் இளவாலை அக்தர் வீதி ஆகியவற்றின் புனரமைப்பிற்கென 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியினை ஒதுக்கியுள்ளது. (க-103)


# கலந்துரையாடல்

(கந்தரோடை)

கந்தரோடை விவசாயிகள் சம்மேளனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள 'காலபோக நெற்செய்கை தொடர்பான' கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை மு.ப.10.00மணிக்கு சம்மேளனத் தலைவர் செ.இலங்கநாதன் தலைமையில் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க-103)

# வாதரவத்தையில் சட்டபூர்வமான திருமணப் பதிவை மேற்கொள்ளாத 23 தம்பதியருக்கு திருமணப் பதிவு


(யாழ்ப்பாணம்)



சட்ட பூர்வத் திருமணப் பதிவுகளை மேற்கொள்ளாத அச்சுவேலி வாதரவத்த பிரதேச தம்பதியர்களில் 23 பேருக்கு சர்வோதய நிறுவனம் சட்டரீதியான திருமணப் பதிவுகளை மேற்கொண்டு சான்றிதழ்களையும் வழங்கியுள்ளது.

கடந்த மாதம் 7ஆம் திகதி வாதரவத்தை சனசமூக நிலையத்தில் வைத்து நடைபெற்ற இந்நிகழ்வில், திருமணப்பதிவினை சட்ட ரீதியாக மேற்கொண்ட தம்பதியர்களுக்கு சர்வோதய நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் க.கனகரத்தினம் திருமணப் பதிவுச் சான்றிதழ்களை வழங்கினார். (க-4)

அன்பு மாணவர்களே!
மிக விரைவில் எதிர் பாருங்கள்
உங்கள் வலம்புரியில்
குடாநாட்டின் முன்னணி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட கா.பொ.த (சாதாரண) பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள்.



தாவடி " சிறி காளி அம்பாள்" சனசமூக நிலையத்தில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் முயற்சித்திறன் மையத்தினால் நடாத்தப்படும் தையல் பயிற்சி நெறிக்கான ஆரம்ப விழாவில் இடமிருந்து வலமாக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தலைவர் உரையாற்றுவதை முதலாவது படத்திலும், உடுவில் தேசிய இளைஞர் பேரவை பிரதிநிதி சி.கணபதிப்பிள்ளை உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், தையல் பயிற்சி நெறியைக் கற்கும் பெண்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:கி.றேகன்)

# சிரிக்கவும் சிந்திக்கவும் உதவுகின்ற நகைச்சுவை

நகைச்சுவையை வாழ்க்கைச் சம்பவங்களில் ஒன்றாகக் கொண்டு விட்ட அநேகர் மிக உற்சாகமாகவும், சுறுசுறுப்புடனும் விளங்குகிறார்கள்.

ஆனால், பிறர் துன்பத்தில் இன்பம் காணுவது போன்ற நகைச்சுவையைக் கையாள்பவர்கள் பிறரின் வெறுப்புக்குத்தான் உள்ளாவார்கள். இப்படியானவர்களை நகைச்சுவையாளர் என்று கூறுவதில்லை. இவர்களை "Sadists" என்றே ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். "சாடிஸ்ட்ஸ்" என்பது ஒரு வகை நோய். பிறர் துன்பமே இவர்களுக்கு இன்பம்.

உலகம் முழுவதையுமே துன்பத்தில் ஆழ்த்தி இன்பம் காணத் துடித்தவர்தான் ஹிட்லர். அவர் வழியில் சென்றவரே சமீபகாலத்து இடி அமீன்

★ ★ ★

"எதிரிகள் என்னைச் சாப்பிடு முன் அவர்களை நான் சாப்பிட்டு விட்டேன" என்பது இடி அமீன் உதிர்த்த ஒரு நகைச்சுவைத் துணுக்கு.

உண்மையில் இந்த மனிதர் எதிரிகளின் உறுப்புகளை பொரித்தும், அவித்தும் சாப்பிட்டு மகிழ்ந்தார் என்று கூறப்படுகின்றது. இதில் எவ்வளவு உண்மை இருக்கும் என்று தெரியவில்லை.

★ ★ ★

பகிடி, முஸ்பாத்தி, நகைச்சுவை என்பவை எல்லாமே மனித மனங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவதற்காக மேற்கொள்ளப்படும் காரியங்கள் தாம்.

நகைச்சுவை என்ற வகையில் மிகக் கீழ்த்தரமான பகிடி விடுபவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சிலர் பிறரைப் புண்படுத்தாமலும், ஏளனப்படுத்தாமலும் சிந்திக்கத் தூண்டுவதுடன், சிரிப்பையுமூட்டுமானால், அதுவே சிறந்த நகைச்சுவை எனலாம். ஆனால், இவ்வாறு செய்வது கடினம். ஒரு சிலரே இந்த வகையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

ஆங்கிலத்தில் "ஜோக்ஸ்" என்பதை "பகிடி" என்று எடுத்துக் கொண்டால், "பிறக்டிக்கல் ஜோக்ஸ்" என்பதை "பகிடிவதை" என்பது பொருத்தமாக இருக்கும். ஆனால், கல்வி நிறுவனங்களில் மேற்கொள்ளப்படும் பகிடிகளை (Ragging) "ராக்கிங்" என்று கூறுவார்கள். (Rag) ராக் என்பதற்கு பல கருத்துகள் உண்டு. அதற்கு ஒரு கருத்து கந்தைத் துணி - இன்னொரு கருத்து புதியவர்களைத் தொந்தரவு செய்யும் சில்மிஷம் என்று லிப்கோ அகராதி கூறுகிறது. ஒக்ஸ்போர்ட் அகராதியிலும், பல கருத்துகளுடன் ஒருவர் மீது மோசமான சேஷ்டைகள விடுவதையும் இச்சொல் குறிக்கிறது.

பல்கலைக் கழகங்களிலும், உயர் கல்விக்குரிய கல்லூரிகளிலும் புதிய மாணவர்களைப் பகிடி செய்வதென்பது ஒரு மரபாகவே இருந்து வருகின்றது.

## அன்றும் இன்றும்

புதியவர்களுக்குக் கூச்சம் தெளிவிக்கவும், புதிய சூழ்நிலைகளுக்கு அவர்கள் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள உதவுமுகமாகவே இந்தப் பழக்கம் இயல்பாகவே உருவாகியதாக - உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ஆனால், அது "பிறக்டிக்கல் ஜோக்காக" பகிடிவதையாக மாறிவிடுவதுதான் பிரச்சினைகளை உருவாக்கி விடுகின்றன.

இந்தப் பகிடிகள் நாகரிகமான முறையில் கனவான்களுக்குரிய வகையில் மேற்கொள்ளப்படுவதையே யாரும் விரும்புவார்கள் - மதிப்பார்கள்.

★ ★ ★

கனவான்கள் என்றால், படித்தவர்கள், பண்பானவர்கள், கண்ணியமானவர்கள் என்பது பொருள். எனவே, கனவான்கள் கீழ்த்தரமான அல்லது வெறுக்கத்தக்க விதமாகப் பகிடிகளில் இறங்குவதை விரும்ப மாட்டார்கள்.

மற்றவர்களை எவ்வளவு வேண்டுமானாலும் கேலியும், கிண்டலும் செய்துவிட்டுத் தம்மை யாரும் கிண்டல் செய்தால் மட்டும் சகித்துக் கொள்ள மாட்டாதவர்களும் உண்டு.

இது பிழையான செயற்பாடு அல்லவா? மற்றவர்களைக் கேலிசெய்யுமபோது, அதே விதமாகக் கேலி செய்யும் உரிமை மற்றவர்களுக்கும் உண்டு என்பதை அவர்கள் உணர்வதில்லை.

★ ★ ★

### தலைப்பாகையும் வெள்ளையர் தொப்பிகளும்

சேர்.சி.பி.இராமன் ரயில் வண்டியில் எங்கோ போய்க்கொண்டிருந்தார். சேர் இராமன் ஒரு தென்னிந்



சேர் சேர்ச்சிலும் அவரது பாரியாரும்.

திய அறிஞருக்குரிய உடையில் தலைப்பாகையுடன் (Turban) அமர்ந்து ஏதோ ஒரு நூலை வாசித்துக் கொண்டிருந்தார். அதேபெட்டியில் இரு வெள்ளைக்கார இளைஞர்கள் மேற்கத்தேய உடையில் தலையில் தொப்பிகளுடன் அமர்ந்திருந்தார்கள். வெகு நேரத்திற்குப் பின் சேர் இராமன் எழுந்து தலைப்பாகையைக் கழற்றி இருப்பிடத்தில் வைத்துவிட்டு அருகில் இருந்த இளைஞர்களைப் பார்த்து இதைப் பார்த்துக்கொள்ளுங்கள் வருகிறேன் என்று சொல்லிக்கொண்டு அந்தப் பெட்டியில் இருந்து வெளியில் சென்றார். சிறிது நேரம் கழித்து அவர் இருப்பிடத்திற்குத் திரும்பிய போது வைத்துச் சென்ற தலைப்பாகையைக் காணவில்லை. வெள்ளைக்காரர்களிடம் கேட்டபோது அது யன்னல் வழியாகக் குதித்து ஓடிவட்டது என்று கூறிச் சிரித்தார்கள்.

சேர் இராமன் ஒன்றும் பேசாமல் முன்போலவே அமர்ந்து வாசிக்கத் தொடங்கினார். வெகுநேரம் சென்று பிறகு வெள்ளைக்காரர் இருவரும் எழுந்து வெளியில் சென்றார்கள். போகும்போது தமது தொப்பிகளைக் கழற்றி வைத்துவிட்டுத் தாம் முன்பு செய்ததை மறந்து விட்டு அல்லது தாம் வெள்ளைக்காரர் என்ற திமிரில் - தமது தொப்பிகளைக் கவனித்துக் கொள்ளும்படி அவரிடம் கூறிவிட்டு வெளியில் சென்றார்கள்.

சிறிது நேரம் கழித்து அவர்கள் திரும்பி வந்தபொழுது அவர்களின் தொப்பிகளைக் காணவில்லை. அவைகளுக்கு என்ன நடந்தது என்று சேர் இராமனிடம் கேட்டார்கள். அதற்கு சேர் இராமன், "உங்கள் தொப்பிகள் எனது தலைப்பாகை யைத தேடிச் சென்றுவிட்டன" என்று கூறிவிட்டுப் பேசாமல் தன் வேலையில் மூழ்கிவிட்டார்.

சேர் இராமன் யார் என்று தெரியாத வெள்ளையர்கள் பின்னர் தெரிந்துகொண்ட போது கவலைப்பட்டதாகக் கூறப்படுவதுண்டு.

★ ★ ★

### புத்திசாலிக்குப் பெயர் சூட்டியவர்

இரு உயர்வகுப்பு மாணவர்கள் உரையாடிக்கொண்டிருந்தார்கள். ஒருவரின் பெயர் புத்திசாலி. உரையாடல் கேலியும், கிண்டலுமாகப் போய்க்கொண்டிருந்தது.

புத்திசாலியைப் பார்த்து மற்றவர் கேட்டார், "டேய் நீ பெரிய முட்டாளாய் இருக்கிறாயே உனக்கு எந்த மடையனடா புத்திசாலி என்று பெயர் வைத்தான்?" என்று.

அதற்குப் புத்திசாலி கொஞ்சமும் தயங்காமல், "உங்கள் அப்பாதான்" என்று பதில் சொன்னார்.

முதலாமவருக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது. சமாளித்துக் கொண்டு "எங்கள் அப்பாதான் உனககுப் பெயர் வைத்தார் என்பது உனக்கு எப்படித் தெரியும் என்று திருப்பிக் கேட்டார்.

"நான் சின்னவனாக இருந்த போது, உங்கள் அப்பா என்னைப் பார்த்துவிட்டு, பையன் மகா புத்திசாலியாக இருக்கிறான், புத்திசாலி என்றே பெயர் வையுங்கள் என்று சொன்னாராம் எங்கள் அப்பாவிடம்" என்று புத்திசாலி விளக்கிக் கூறினார்.

★ ★ ★

### அவித்து அல்ல பொரித்துச் சாப்பிடு

ஆங்கில சஞ்சிகை ஒன்றில் வெளிவந்திருந்த நகைச்சுவையொன்று பின்வருமாறு:-

மனித மாமிசம் சாப்பிடும் ஆபிரிக்கக் காட்டு வாசி ஒருவர் வயிற்றுளைவு காரணமாக தங்கள் பிரதேசத்து நாட்டுவைத்தியரிடம் போனார்.

வைத்தியர் நோயாளியைப் பரிசோதித்துவிட்டு, "சமீப காலமாக என்ன சாப்பிடுகிறீர்" என்று கேட்டார்.

"இப்போதெல்லாம் நல்லதாய் ஒன்றும் கிடைப்பதில்லை. வெள்ளை நீளச் சட்டையும், இடுப்பில் கறுப்புப் பட்டியும், மொட்டைத் தலையும், கையில் ஒரு புத்தகமும் கொண்டு திரிகிறார்களே அவர்கள் தான் என்று நோயாளி கூறினார்.

"ஆனால், என்ன மாதிரிச் சாப்பிடுகிறீர். பச்சையாகவா, அவித்தா...?"

"அவித்துத்தான், என்னிடம் பெரிய கிடாரம் இருக்கிறது"

"அதுதான் வயிற்றுளைவுக்குக் காரணம். அதுகளை அவித்துச் சாப்பிடக்கூடாது - உரித்துப் பொரித்துச் சாப்பிடவேண்டும்" என்றார் வைத்தியர்.

ஆபிரிக்கக் காட்டுப் பகுதிகளில் மதத்தொண்டு புரியச் சென்றிருந்த கிறிஸ்தவப் பாதிரிமாரை அந்தக் காலத்தில் காட்டு வாசிகள் எவ்வாறு பிடித்துச் சாப்பிட்டிருந்தார்கள் என்பதை இந்த நகைச்சுவை எடுத்துக் காட்டுகிறது அல்லவா?

★ ★ ★

### மார்க்ருவேயின் பகிடிகள்

மார்க்ருவேயின் என்ற அமெரிக்க நகைச்சுவை எழுத்தாளர் ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக ஒரு நகருக்குப் போயிருந்தார். கூட்டம் ஆரம்பமாக இன்னும் நேரமிருந்ததால், சலூன் ஒன்றுக்குள் நுழைந்து சவரம் செய்துகொள்ள ஆசனத்தில் அமர்ந்தார். சவரத் தொழிலாளி அவசர அவசரமாக அவரது முகத்தில் சவர்க்காரத்தைப் பூசத் தொடங்கினார்.

"என்ன அவசரம், இந்த ஊரில் இன்று அப்படி என்ன விசேஷம்" என்று கேட்டார் எழுத்தாளர்.

அதற்குத் தொழிலாளி, "இன்று மார்க்ருவேயின் என்ற எழுத்தாளர் ஒரு கூட்டத்தில் பேசப்போகிறார். அதைத்தான் நானும் பார்க்கப் போகிறேன். அதற்காகத்தான் இந்த அவசரம் என்றார்.

"அவனை உனக்குத் தெரியுமா" என்று கேட்டார் ருவேயின்.

"இல்லை இன்றுதான் பார்க்கப் போகிறேன்" என்றார் தொழிலாளி.

"அவன் கிடக்கிறான் மடையன், நான் போனால் தான் அவனுடைய நிகழ்ச்சியே நடக்கும், நீ அவசரப்படாமல் தொழிலை ஆறுதலாகச் செய்" என்றார் ருவேயின்.

தொழிலாளிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. அவர் சவரக் கத்தியைப் பிடித்த விதமே அச்சுறுத்துவதாக இருந்தது. ருவேயின் சமாளித்துக்கொண்டு,

"கோபப்படாதேயப்பா, நானும் அந்தக் கூட்டத்திற்கு வரத்தான் போகிறேன்" என்று கூறி வேலையை முடிப்பித்துக்கொண்டு புறப்பட்டவர், "என்றாலும் நான் போகாவிட்டால் அந்த மடையன் கூட்டத்திற்கு வரவே மாட்டான்" என்று கூறிக்கொண்டு வெளியேறினார்.

★ ★ ★

தேவாலயத்தில் பாதிரியார் அருமையான பிரசங்கம் ஒன்றை நிகழ்த்திவிட்டுச் சபையோருடன் அளவளாவுவதற்காக ஆலயத்தின் முன்பக்கம் வந்தார்.

சபையோர் [illegible] மே அவரது பிரசங்கத்தை [illegible] டிக்கொண்டிருந்தபோது, அந்தப் பிரசங்கத்தின் ஒவ்வொரு சொல்லையும் தாம் ஒரு புத்தகத்தில் பார்த்திருப்பதாக மார்க்ருவேயின் அடித்துக் கூறினார்.

பாதிரியார் எங்கோ பார்த்து எழுதிக்கொண்டு வந்து பிரசங்கம் செய்திருக்கிறார் என்பதுபோல், அவரது குற்றச்சாட்டு இருந்தது.

பாதிரியாருக்குப் பெரும் சங்கடமாகப் போய்விட்டது.

கூட்டத்தினரும் மார்க்ருவேயின் பாரிதியாரை ஏளனப்படுத்த முனைகிறார் என்று கருதி அவருடன் வாக்குவாதப் பட்டார்கள். தமது கூற்றை நிரூபிப்பதாகவும், அந்தப் புத்தகத்தையே கொண்டுவந்து காட்டுவதாகவும் ருவேயின் கூறினார்.

அடுத்த ஞாயிறு அதேவிதமாகக் கூட்டம் கூடியிருந்தது. பாதிரியாரும் வந்திருந்தார். மார்க்ருவேயின் ஒரு நூலைக் கொண்டு வந்திருந்தார். பாதிரியார் பிரசங்கத்தில் பயன்படுத்திய ஒவ்வொரு சொல்லும் அந்தப் புத்தகத்தில் இருப்பதாகக் கூறிப் புத்தகத்தைக் காட்டினார் ருவேயின். கூட்டத்திலிருந்தவர்கள் மட்டுமல்ல பாதிரியாரும் கூட வாய்விட்டுச் சிரித்தார். ஏனென்றால், அது ஒரு ஆங்கில அகராதி (Dictionary)

★ ★ ★

மார்க்ருவேயின் புதிதாக ஒரு வீடு கட்டினார். அந்த வீட்டின் சமையல் அறை முன்பக்கமாக இருக்கும் வகையில் கட்டப்பட்டிருந்தது.

அவரைப்பார்க்கவந்த நண்பர்கள் பலர் இதைப்பற்றி விசாரித்தார்கள். சமையல் அறையை முன்பக்கம் வைத்து எவரும் கட்டுவதில்லையே நீங்கள் ஏன் இப்படிச் செய்திருக்கிறீர்கள் என்று நண்பர்கள் கேட்டார்கள்.

"உங்கள் வசதிக்காகத்தான் இவ்வாறு செய்துள்ளேன்" என்று மார்க்ருவேயின் கூறினார்.

நண்பர்களுக்கு ஆச்சரியமாக விருந்தது. அவர் மேலும் கூறினார், "இங்கு என்னை எவன் பார்க்க வருகிறான்? என்னோடு கதை கொடுத்துவிட்டுக் குசினிப் பக்கமே எட்டி எட்டிப் பார்க்கிறீர்கள் அப்படியான உங்களுக்கு வசதியாக இருக்கட்டும் என்றுதான் இப்படி" என்றார் அவர். அதற்குப் பிறகு நண்பர்கள் வரவு குறைந்ததா என்பது தெரியவில்லை.

★ ★ ★

### பேர்னாட்ஷா

மார்க்ருவேயினின் நகைச்சுவை நடவடிக்கைகளை விட நாடகாசிரியர் பேர்னாட்ஷாவின் கிண்டலும் குத்தலும் நிறைந்த நகைச்சுவைச் செயற்பாடுகளைப் பிரமாதமாக சிலாகித்துப் பேசுபவர்கள் உண்டு.

ஒரு குறுகிய பாதை வழியாக ஷா நடந்துபோய்க்கொண்டிருந்தார். எதிரே வந்த அவருக்கு எதிராளியான ஒருவர் "போக்கிரிகளுக்கு நான் இடந்தரமாட்டேன்" என்று கூறியபடி வழியை மறித்துக்கொண்டு நின்றார்.

"ஆனால, நான் இடந்தருவேன்" என்று கூறிக்கொண்டு ஷா ஒதுங்கி நின்றார். ஷா பயந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு எதிராளி போய்விட்டார். ஷாவின் குறும்புத்தனமான செயற்பாடு அவருக்கு வெகுநேரம் கழித்துத்தான் புரிந்திருக்க வேண்டும்.

★ ★ ★

தமிழ்ப்படங்கள், நாடகங்களில் நகைச்சுவையை வெளிப்படுத்தியது மட்டுமனறி சிரிப்பின்மூலம் சிந்திக்கவும் செய்தவர் கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன். அவர்தம் வாழ்க்கையிலும் கூட பலசந்தர்ப்பங்களில் நகைச்சுவை மூலம் படிப்பினைகளைப் புகுத்தினார் என்பார்கள்.

என்.எஸ்.கேயும் மதுரமும் காரில் எங்கோ போய்க்கொண்டிருந்தார்கள். ஓட்டுநர் மிக வேகமாக காரைச் செலுத்திக்கொண்டு போனார். வெளியான ஒரு இடம் வந்தபோது, காரை நிறுத்தச்சொல்லி வெற்றிலைப்பெட்டியும் கையுமாக காரில் இருந்து இறங்கிய கலைவாணர் மதுரத்தையும் இறங்கச்சொல்லி, இறக்கிவிட்டு ஓட்டுநரிடம் "ட்றைவர் உனக்கு ஏதும் அவசரம் என்றால் போய்விட்டு வா, எங்களுக்கு ஒண்ணும் அவசரம் இல்லை. மெதுவா போய்க் கொள்கிறோம்" என்று கூறிவிட்டு ஒரு மரத்தின் கீழ் வெற்றிலைப் பெட்டியுடன் அமர்ந்துகொண்டு விட்டாராம். ஓட்டுநருக்கு அதற்குப் பிறகு தான் தாம் செய்த தவறு புரிந்திருக்கும்.

### நஞ்சையும் அருந்தத் தயார்

அந்தக் காலத்தில் பிரிட்டனில் சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் தலைமையில் கொன்சர்வேடிவ் கட்சி பதவியிலிருந்தபோது, எதிர்க்கட்சியிலிருந்த பெண் உறுப்பினர் ஒருவர் பிரதமர் சேர்ச்சிலை விமர்சித்து காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார். இறுதியில் பிரதமரைப் பார்த்து, "நீர்மட்டும் எனது கணவராக இருந்தால், நீர் பருகும் கோப்பியில் நஞ்சைக் கலந்து கொடுத்துக் கொன்றிருப்பேன்" என்று முடித்தார்.

அதுவரை புன்சிரிப்புடன் பெண் உறுப்பினரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில், விறைப்பாக எழுந்துநின்று, "நான் மட்டும் உமது கணவராக இருந்தால், நிச்சயமாக நஞ்சென்று தெரிந்திருந்தாலும், அந்தக் கோப்பியைக் குடித்திருப்பேன்" என்றார்.

சபை குபீரென்று சிரித்தது. பெண் உறுப்பினராலும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

★ ★ ★

இலங்கைப் பாராளுமன்றில் பிரதமர் டட்லிசேனநாயக்க பேசிக் கொண்டிருந்தார். பெண் உறுப்பினர் ஒருவர் அடிக்கடி குறுக்கிட்டு "எல்லாம் கடன்" உங்கள் அரசு வெளிநாட்டுக் கடனை விட்டால், நிலைக்காது என்ற கருத்து வெளிப்படும்படி அடிக்கடி கூறிக்கொண்டிருந்தார். டட்லிக்கு இலேசில் கோபம் வராது. ஆனால், பெண் உறுப்பினரின் தலையீடு சகிக்கமுடியாமல் போகவே: "நான் உங்கள் ஒருத்தரையும் கடன்வாங்கப் போவதில்லை. கவலையை விடுங்கள் என்று பளிச் சென்று கூற பெண் உறுப்பினர் வாயடைத்துப் போனார். சபையில் சிரிப்பு அடங்க வெகுநேரமாயிற்று.

★ ★ ★

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் மாவிட்டபுரம் கோயில் ஒன்று தொடர்பான வழக்கு நடந்துகொண்டிருந்தது. வவுனியா எம்.பியும் சட்ட வல்நருமான வி.சுந்தரலிங்கம் ஆலயத்தின் தரப்பில் ஆஜராகியிருந்தார். அப்போதைய யாழ்ப்பாணத் துணைப் பொலிஸ்மா அதிபர் இரா. சுந்தரலிங்கம் சாட்சியம் அளித்தார்.

பொலிஸ் அதிபரின் தந்தையார் நாடறிந்த சமயவாதி, றீடர்ஸ் டைஜஸ்ட் சஞ்சிகையின் ஆசிரியர் இதை மனதில் வைத்துக்கொண்டு வவுனியா சுந்தரலிங்கம் துணைப் பொலிஸ்மா அதிபர், "ஒரு நல்ல மனிதரின் கூடாத பிள்ளை என்று வர்ணித்தார். நீதிமன்றில் சிரிப்பொலி கேட்கவேண்டாம். **அன்பன்**

## ஹிங்குரான சீனி தொழிற்சாலை

# தனியார் மயப்படுத்த அமைச்சரவை முடிவு;

## ஜனாதிபதி கடும் ஆட்சேபம்

(கொழும்பு)

ஹிங்குரான சீனி தொழிற்சாலை, கால்நடை அபிவிருத்தி சபைக்கு சொந்தமான 10 பண்ணைகள், அரசாங்க மரக்கூட்டுத் தாபனம் போன்றவற்றை தனியார் மயப்படுத்தப் போவதாக கடந்த புதனன்று அமைச்சரவை தீமானித்துள்ளது.

அமைச்சரவையின் இத்தீர்மானத்திற்கு ஜனர்திபதி தனது ஆட்சேபனையை தெரிவித்துள்ளார். அன்றைய அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி சமுகமளித்திருக்காத போதும் தனது ஆட்சேபனைக் கடிதத்தை அமைச்சரவைக்கு அனுப்பி வைத்திருந்தார்.

ஜனாதிபதி தனது ஆட்சேபனை கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது, மரக்கூட்டுத்தாபனம் மூலம் 2002ல் 90 மில்லியன் இலாபம் கிடைத்துள்ளது. இந்நிறுவனம் அண்மைக்காலங்களில் திரட்டு நிதிக்கு நியாயமான பங்களிப்பை செய்து வருகிறது. அத்துடன், காட்டு மரத்தில் வர்த்தக முயற்சிகளை மேற்கொள்வதற்கு போா உபாயக் காரணங்களும் இல்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நடடத்திலியங்கும் இந்நிறுவனங்களை இனிமேலும் வைத்துக் கொண்டிருக்க முடியாது எனப் பிரதமரும், அமைச்சர் மிலிந்த மொறகொடவும் தீர்மானித்ததை அடுத்தே அமைச்சரவை மேற்கண்ட முடிவை தெரிவித்திருந்தது.

(க-6)

## ரணிலும் சமாதானமும்...




## விலங்கு விசர் நோயைத் தடுப்பதற்கான

# ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்வது உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பு

(சுதுமலை)

இலங்கையில் விலங்கு விசர் நோய காரணமாகப் பலர் பாதிப்படைந்துள்ளனர். மேலும் பல அநியாய உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நோயை பரவவிடாது தடுப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களுக்கே உரியது என வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சிப் பணிப்பாளர் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

அச்சுற்றறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்டாக்காலி நாய்களை ஒழித்தல் மற்றும் வளர்ப்பு நாய்களிற்கு உரிய முறையில் தடுப்பூசி ஏற்றுதல் போன்ற நடவடிக்கைளை உள்ளூராட்சி மன்றங்களின் பூரணஒத்துழைப்புடன் செயற்படுத்த வேண்டும்.

அத்துடன், இந்நடவடிக்கைக்கு தங்கள் பகுதி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் கால்நடை வைத்திய அதிகாரியின் ஒத்துழைப்பையும் பெற்று இந்நடவடிக்கைகளை முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

மேலும் இந்நடவடிக்கைகளிற்கு உள்ளூராட்சி மன்றங்களிற்கு கணிசமான அளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்நோயை பரவவிடாது தடுப்பதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு உள்ளூராட்சி மன்றங்களிற்கே உரியது எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பான செயற்திட்டம் ஒன்றை தயாரித்து தங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, கால்நடை வைத்திய அதிகாரி ஆகியோரின் ஆலோசனையுடன் செயற்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுத்து, இத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையை எதிர்வரும் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் தனக்கு அனுப்பிவைக்குமாறும் சகல உள்ளூராட்சி மன்ற விசேட ஆணையாளர்களிற்கும் அறிவித்துள்ளார்.

(க-252)

## பாறின்-இலங்கை

# கூட்டு ஆணைக்குழு அமைப்பு

(கொழும்பு)

பாறினுக்கும் இலங்கைக்கும் இடையே கூட்டு வர்த்தக் ஆணைக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அந்நாட்டில் பணிபுரியும் சுமார் 17 ஆயிரம் இலங்கையர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டே இவ்வாணைக் குழு அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக வெளிநாட்டு அமைச்சர் டிரோன்பெர்னாண்டோ நேற்று முன்தினம் அங்கு போய்ச் சேர்ந்துள்ளார்.

பாறின் தலை நகரில் இன்று நடைபெறவுள்ள அந்நாட்டு வர்த்தகப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இவ்வாணைக்குழு அமைக்கப்படுமென அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் ஏ ஆர் மன்சூன் தெரிவித்துள்ளார்.

(தி)

# ஸ்ரீ.மு.கா-ஐ.தே.கட்சி இணைந்து பொது முன்னணி அமைப்பதில் முனைப்பு

## கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்து பொது முன்னணி ஒன்றை உருவாக்க முனைந்து வருவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தொிவிக்கையில்,

அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸ் கட்சி நடத்திய சந்திப்புக்களை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், அடுத்து வரும் தேர்தல்களில் இவ்விரு கட்சிகளும் இணைந்து பொது வேட்பாளர்களை நியமிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும் இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

இச்சந்திப்பை அடுத்து, பாராளுமன்றத் தேர்தல் அல்லது உளளூராட்சி மனறத் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவதென்ற தீர்மானத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி மாற்றிக்கொண்டுள்ளது.

இச்சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சச் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் போஷகர் மலிக் சமரவீர, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சாாபில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கம், செயலாளர் நாயகம் ஹசன் அலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இவ்விரு கட்சிகளுககும் இடையிலான மற்றுமொரு முக்கிய சந்திப்பு இன்று நடை பெறவுள்ளது.

(தி)

# மக்களின் வாழ்க்கையை சீர்குலைக்கும் அரசியல்வாதிகளை ஒருபோதும் அனுமதியேன்

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டை பெரும் பாதிப்புக்குள் இருந்து பாதுகாக்க , அனைவரும்



ஒன்றுதிரள வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைப்பு விடுத்துள்ளார்.

களுத்துறையில் நேற்று முன்தினம நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வழைப்பினை விடுத்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய ஜனாதிபதி, யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கும் போது, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பல்வேறு அசம்பாவிதங்களும், வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன.

ஆனால் ஐக்கியதேசிய முன்னணி அரசு இவற்றை மூடிமறைத்து வருகிறது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இவ்வாறான சூழ்நிலைகள் இன்றி மக்கள் சுதந்திரமாக வாழக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும்.

மக்களின் அமைதியான வாழ்க்கைக்கு அரசியல்வாதிகள் இடையூறு விளைவிக்கவோ அன்றி பங்கம் ஏற்படுத்தவோ நான் ஒருபோதும் அனுமதியேன்.

இதேசமயம், மக்கள் பாரிய எதிர்ப்புகளுடன் பதவிவகித்த அரசாங்கத்தை மாற்றி, பதிய அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டு வந்த போதும், பொருட்களின் விலை வீழ்ச்சி மற்றும் தொழில்வாய்ப்பு, அபிவிருத்தி ஆகியவற்றில் மக்கள் எதிர்பார்த்தபடி எந்தவித வளர்ச்சியும் ஏற்படவில்லை.

மாறாக மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சியை தக்கவைப்பதற்குத் தான் தற்போதைய அரசு முனைந்து வருகிறது.

மேலும் சமாதானம் என்ற பெயரினால் நாட்டின் ஒருபகுதியை பயங்கரவாதிகளிடம் ஒப்படைக்கவும் அரசு முயற்சித்து வருகிறது. இதனால் மீண்டுமோர் யுத்தம் ஏற்படக்கூடிய நிலையே உருவாகும் என்றார்.

(தி-10)

# கூட்டணி முறிவடைந்ததாக ஸ்ரீ.சு.க. முறையாக அறிவிக்கவில்லை

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிகளுக் கிடையிலான கூட்டணி அமைக்கும் முயற்சி முறிவடைந்தமை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் இன்னும் வெளியிடவில்லை.

ஆனால், இப்பேச்சுக்கள் தோல்வியில் முடிந்ததாகவும் இதற்கு வடக்கு-கிழக்கின் நிர்வாகம் மறறும் நடவடிக்கைகள் குறித்த முரண்பாடே காரணம் என ஜே.வி.பி. நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடந்த 7 மாதங்களாகக் கூட்டணி அமைப்பது தொடர்பாக இடம்பெற்றுவந்த பேச்சு வார்த்தைகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து கைவிடப்பட்டுள்ளன.

இப்பேச்சுக்கள் கைவிடப்பட்டதாக செய்திகள் வெளிவந்த போதிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இது குறித்த அறிக்கையினையோ அன்றி கருத்துக்களையோ இன்னமும் வெளியிடாமை குறித்து அரசியல் அவதானிகள் மத்தியில் பெரும் சந்தேகம் எழுந்துள்ளது.

(தி)

## அதிபர்களுக்கான வினைத்திறன் பரீட்சை

(மருதங்கேணி)

அகில இலங்கை அதிபர் சேவைக்கான வினைத்திறன் காண் பரீட்சை இம்மாதம் 13,14ஆம் திகதிகளில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை கிளிநொச்சி துணுக்காய், முல்லைத்தீவு கல்வி வலய அதிபர்களுக்கு கொழும்பில் நடைபெறவிருந்தது ஆயினும் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினரின் கோரிக்கைக்கு இணங்க யாழ்ப்பாணத்தில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-35)

வினைப்பகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.
—குறள்—

வலம்புரி

## கூட்டுக் குலைவது நாட்டுக்கு நல்லது

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச் சேர்வதற்கு எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியில் முடிவடைந்துவிட்டது. இரண்டு கட்சிகளும் தங்களுக்குள் ஓர் கூட்டை ஏற்படுத்தி, ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வந்த போதிலும், இறுதி நேரத்தில் கூட்டு முயற்சிகள் தோல்வி கண்டு விட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச் சேர்வதன் நோக்கம் ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்துள்ள சமாதான முயற்சியைக் குழப்புவதாகும். இதன் பின்னணியில் இரண்டு கட்சிகளும் கூட்டுச் சேர்வதன் மூலம் பாராளுமன்றத்தில் தங்களது பலத்தை அதிகரித்துக் கொண்டு அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தன. எனினும், அவர்களின் திட்டம் கைகூடவில்லை.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை இலங்கை சிங்கள தேசம். அது சிங்களவர்களுக்கேயுரியது. இங்கு தமிழர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள். ஆகையால் அவர்களுக்குரிமைப் பிரச்சினை என்பதே கிடையாது. அவ்வகையில் அரசாங்கம் விடுதலைப் புலிகளோடு பேச்சு நடத்தக் கூடாது. இது அவர்களது கொள்கை.

ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நோக்கம் வேறுபட்டது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். சமாதான முயற்சியை முன்னெடுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினாலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட வேண்டும். இதனை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைக்க வேண்டும். இத்தகைய வேறுபட்ட இலக்குகளின் அடிப்படையில், இரு கட்சிகளும் கூட்டுச் சேர்வது இயலாத விடயமாகிவிட்டது.

நாட்டைப் பாதுகாப்பதற்காக உயிரைக் கொடுத்தேனும். ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர வேண்டுமெனக் கூறிய அனுராபண்டார நாயக்கா, தனது அவசர புத்தியின் மத்திமத்தை இப்போதாவது உணர்ந்திருப்பார். அவரைப் பொறுத்தவரை நாட்டில் இரண்டு பிரதமர்களின் மகன் என்ற பெருமையைத் தவிர வேறெந்த அந்தஸ்தும் அவருககு இருக்க முடியாது.

சொந்தச் சகோதரி ஆட்சி நடத்திய காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் பெற்று தனது சகோதரியையே கண்டபாட்டில் தூற்றியவர் அவர். அவரை வைத்துக் கொண்டே ஐக்கிய தேசியக் கட்சி பொது ஜன ஐக்கிய முன்னணிக்குத் தொந்தரவு கொடுத்து வந்தது. அப்பேற்பட்டவர் உயிரைக் கொடுத் தேனும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர வேண்டுமெனக் கூறியதைப் பெரிது படுத்துவது அறியாமையின்பாற்பட்டதாக இருக்கும்.

# இரப்போர்க்கு ஈந்தளிக்கும் அன்னை

# இன்று 75வது அபிஷேக விழா காண்கிறாள்

**யாழ். அடைக்கலநாயகி ஆலய அபிஷேக 75வது ஆண்டு விழா நிறைவையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

யாழ்ப்பாணத்தில் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட சிற்றாலயங்கள் மூன்று. இவை எல்லாமே எமது அன்னையின் பெயரைத் தாங்கியிருந்தன. கொன்சேஞ்சி மாதா (ஆரோபரணம் - தற்போதைய பேராலயம்), புதுமை மாதா (முன்னைய வெற்றி நாயகி ஆலயம் யாழ். கோட்டை) அடைக்கல மாதா பின்னைய ஆலயம் யாழ்ப்பாண பட்ட இராச்சியத்தின் பாதுகாவலர் விழா புரட்டாதி 8ல் கொண்டாடப்பட்டது, 1622ஆம் ஆண்டு இந்த இராச்சியம் முறைப்படியான சமயச் சடங்குகளுடன் அரசாங்கத்தாலும் திருச்சபையாலும் நமது அன்னைக்கு 8 புரட்டாதியில் அர்ப்பணம் செய்யப்பட்டு வருடாவருடம் போர்த்துக்கேயர் இத்தினத்தை பெருவிழாவாக கொண்டாடியதை வாசிக்கின்றோம். வரலாற்று ரீதியாக ஆரம்பத்திலிருந்தே இது இந்த ஆலயத்தின் விசேஷமான விழாவாக இருந்தது. (பிதா ஞானப்பிரகாசர் அ.ம.தி). பாரம்பரியப்படி 1783க்கும் 1802 க்குமிடையில் கல்லால் கட்டப்பட்ட முன்னைய ஆலயம் பிதா லொபோ அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டு 1828ல் கட்டி முடிக்கப்பட்டது. பெற்றக்கினி ஆயர் அவர்களால் இது இணைப்பேராலயமாக 1848ல் இருந்து சில காலம் பாவிக்கப்பட்டது. வடபகுதியின் முன்னணி கத்தோலிக்க கல்வி நிறுவனமான புனித பத்திரிசியார் கல்லூரியின் ஆரம்பம் இவ்வாலய வளவினில் இருந்தது. பாரிய பக்தித் தலமாகவிருந்த எமது அடைக்கல அன்னை ஆலயத்திற்கு தீவின் பல பாகங்களிலிருந்து திரளான மக்கள் கூட்டம் வருகை தருவது ஆச்சரியமான விஷயமல்ல. கோவா மற்றும் இத்தாலியைச் சேர்ந்த பிரசங்கப் பணியாளர்களின் தொழிற்பாடுகள் இந்த ஆலயத்தில் தான் நடந்தேறின. காலப்போக்கில் பழைய ஆலயம் சிதைவுற்றது.

புதிய கட்டிடத்தின் தேவை உணரபபட்டு 1907ல் ஆயர் ஹென்றி யூலெயின் அவர்களால் அத்திபாரமிடப்பட்டது. பங்குக் குருவாக நியமிக்கப்பட்ட அருள்திரு பெருஸ்ஸால் பங்கு மக்களை செயற்படத் தூண்டத் தொடங்கினார். 1828ஆம் ஆண்டு புரட்டாதி 8ஆம் நாள் ஆயர் யே.ஏ. கியோமர் புதிய ஆலயத்தை அபிஷேகம் செய்தார். புதிய ஆலயமானது நவீன ஐரோப்பிய முறையில் குருசு அமைப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள கட்டடங்களில் மேன்மையானது. யாழ்ப்பாணக் கத்தோலிக்கரின் விசுவாசத்திற்கு இது ஓர் ஞாபகார்த்தம், பட்டினத்திற்கு ஓர் ஆபரணம்போல் அத்துடன் புனித கட்டடக் கலையில் பிரமிக்க வைக்கிறது. (பிதா எஸ். ஞானப்பிரகாசர் புனித இயூயின் டீ. மசெனட்டின் அன்புப் புத்திரர்களான அமலமரித் தியாகிகளின் அர்ப்பணிப்புடனான மறைபரப்புச் சேவையின் சின்னமாக இந்த ஆலயம் விளங்குகின்றது.

பங்கின் சுயபாஷைப் பாடசாலை ஒன்று 1873ல் பதிவு செய்யப்பட்டது. மாதாவுக்கான பாரிய ஞாபக சின்னமாக ''பியெற்றா'' இது கல்வாரி மண்டபம் எனக் கூறப்படுகிறது. இது உடைத்து சிதைக்கப்பட்ட பழைய ஆலய பரிசுத்த தலத்திற்கு மேல் 1929ல் கட்டப்பட்டது. தற்போதைய செம்பினாலான பியெற்றா 1932ல் ஸ்தாபிக்கப்பட்டது. தவக்காலத்தின் 6வது வெள்ளியில் இந்தத் திருத்தலத்தில் நடாத்தப்படும் ஆராதனைகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வர். வாராந்த வெள்ளி வழிபாடுகள் ஒரு மேலதிக கவர்ச்சியாகும். ஆலயத்தின் மரத்தினாலான தடை தடுப்புக்கள் மக்கோனாவிலிருந்து கொண்டு வரப்பட்டு 1932ல் ஆலயத்தை வந்தடைந்தது. புதிய அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனங்கள் பிரதான பீடத்தின் பின்னால் உள்ள செருபங்களுக்கு மக்களால் உவந்தளிக்கப்பட்டது. அத்துடன் மாபிளினாலான நற்கருணைப் பேழை, பிரசங்க மேடை மின்விளக்குடனான இரண்டு தேவதூதரின் சொரூபங்கள், பக்கப் பீடங்கள், உள்பகக சிலுவைப் பாதை ஸ்தலங்கள், மற்றும் பித்தளையிலான சங்கிலி விளக்குகள் மக்களால் உவந்தளிக்கப்பட்டன. முகப்பின் இருபக்கமும் பெரிய அழகான தெளிவான மணிக் கோபுரங்கள் இருக்கின்றன. கோபுரத்தின் வலது பக்கத்தில் மூன்று மணிகள் உண்டு. இடது பக்கத்தில் பெரிய மணிக்கூடு நாதம்எழுப்பும் மணிகளுடன் இருக்கின்றது. இந்த இனிமையான மணிகள் 15 நிமிடங்களுக்கு ஒருமுறை நாதம் எழுப்புவதுடன் ஒவ்வொரு மணித்தியாலமும் ''வாழ்க மரியே'' என்னும் இராகத்தை எழுப்பும். பங்கு மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் வகையில் ஆயர் ஜே. எமிலியானுஸ் பிள்ளை வெள்ளி விழாத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். [illegible] விழாக் கொண்டாட்டங்கள் [illegible] ஆயர் வ. தியோகுப்பிள்ளையின் தலைமையில் நிறைவேறின. புரட்டாதி 7ஆம் திகதி விழாவில் மட்டு-திருமலை ஆயர் மேதகு எஸ். ஆர். அன்ரனி தலைமை தாங்கினார். ஆலயத்தின் உள்பக்கம் முழுவதும் சபையினரின் சௌகரியத்தை கருத்தில் கொண்டு ஆசனங்கள் வைக்கப்பட்டுள்ளன. 08-09-1993ல் அபிஷேகத்தின் 65ஆம் நிறைவு விழா கொண்டாடப்பட்டது.

**திருமதி சோதிமலர் இராஜசிங்கம்**

இயேசுவின் பிறப்பின் 2000 வருட யூபிலியின் ஞாபகமாக திறந்த வெளியில் 12 சிலுவைப் பாதை நிலைகள் அமைக்கப்பட்டு ஆயர் சவுந்தரநாயகம் மற்றும் ஜே. பி. செல்வராஜா ஆகியோரால் ஆசீர்வதிக்கப்பட்டது. வெளியிலே சிலுவைப் பாதை நிலைகளைக் கொண்ட வட இலங்கையின் முதலாவது ஆலயமாகையால் இந்த வளாகம் ஈழத்தின் கல்வாரி என அழைக்கப்படுகிறது. தவக்காலத்தில் வெள்ளிக் கிழமைகளில் காலை மாலை ஆராதனைகள் நடைபெறுகின்றன. 20 வருட இனப் போராட்டத்தில் ஆலயம் மோசமாக சேதமடைந்தது. இதன் காரணமாக நூற்றுக்கணக்கான பங்கு மக்கள் இடம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். அத்துடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு கட்டடங்கள் தஞ்சம் அளித்தன. இங்கேயும் வெளிநாட்டிலேயும் சேகரிக்கப்பட்ட லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் ஆலயத்தின் பாரிய பழுது பார்த்தல்கள், குருமனை இரண்டு மண்டபங்கள் ஆகியனவற்றின் திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. மேல் மட்டத்தை அடைய சுழற்சியான இரும்புப்படி அமைக்கப்பட்டுள்ளது. வேறு இரும்புப்படிகளின் உதவியுடன் மணிகளையும் சென்றடையலாம். 75ஆம் ஆண்டு ஆலய யூபிலியின் நிறைவாக ஒரு முன்பள்ளியும் ஒரு மண்டபமும் புதிதாகச் சேர்ந்துள்ளன.

ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் புதிய ஆலயத்தின் அபிஷேகத்தின் 75ஆம் வருட யூபிலி பேரருட் திரு. இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை யாழ். மறை மாவட்டத்தின் பல குருமாருடன் இணைந்து நிறைவேற்றும் கூட்டுத் திருப்பலியுடன் முன்னெடுத்துச் செல்லப்படும் பல பக்திச் சபைகளும், அன்பியங்களும், பங்கு மேய்ப்புப் பணி சபையும விசுவாசத்தின் அக்கினியை அழியவடாது திருச்சபையின் பணிகள் சிறக்க செயற்படுவதற்கு பங்குத் தந்தைக்குத் துணையாக இருக்கின்றனர்.

மரியே வாழ்க மரியாள் மூலம் யேசுவுக்குப் புகழ்.

## மன்னார் – வவுனியா வீதியில்

# மக்கள் பயன்படுத்தும் பேருந்துகளை படையினர் பாவிப்பதால் பெரும் சிரமம்

### அப்பகுதி மக்கள் எம்.பிக்களுக்கு புகார்

(மன்னார்)

மன்னார் வவுனியா வீதியில் மக்கள் பயன்படுத்தும் பேருந்துகளை படையினர் பயன்படுத்துவதால் பல அசௌவ்கரியங்களுக்கு உள்ளாவதாக அப்பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதமொனறை அனுப்பி வைத்துள்ளனர்.

மன்னார்-வவுனியா வீதியில் மக்கள் பேருந்துகளை படையினர் பயன்படுத்துவதாகவும் இதனால் தாம் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாவதாகவும் சுட்டிக்காட்டியே மேற்படி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவிடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு தமக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தரும்படி நாடாளுமன்ற உறுப்பினர்களை அப்பகுதி மக்கள் கேட்டுள்ளதாக தெரியவருகிறது.

அதேசமயம், புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் இவ்வாறான படையினரின் செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவது குறித்து மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (க-43)

## அமெரிக்க அதிகாரி யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவராலயத்தின் பொது சனத் தொடர்பு உயர் அதிகாரி செல்வி ஹேரலி டெய்லர் எதிர்வரும் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணம் வரும் இவர், கல்வியியலாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் ஆகியவர்களைச் சந்தித்து சமூகப் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடுவதுடன், பத்திரிகையாளர்களைத் தனித்தனியே சந்தித்துப் பேசவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-16)

**தினசரி தியானம்**

**புலனடக்கம்**

புலனடக்கம் அல்லது தன்னடக்கம் மோட்ச பீடத்தின் அததிபாரமாகும். அததிபாரம் வலுவாக இல்லையானால் பலத்த மழையின்போது கட்டடம் விழுந்துவிடும். அதுபோல் பிரமச்சாரியத்தில் நீங்கள் உறுதியுடன் இல்லையென்றால், அல்லது தீய எண்ணத்தால் உங்கள் மனம் ஆட்கொள்ளப்பட்டால், வீழ்ந்து விடுவீர்கள் யோக நிலையில மிக உயர்ந்த நிர்விகல்ப சமாதியை உங்களால் அடைய முடியாது.

**சுவாமி சிவானந்தர்**

## பயணிகள் பாதுகாப்பு கவசம் கட்டாயம் வழங்கப்பட வேண்டும்

### கலந்துரையாடலில் தெரிவிப்பு

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிக்கான பயணிகள் படகு சேவையினைச் சீர்செய்வது தொடர்பான முக்கிய கலந்துரையாடலொன்று ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம்,ஊர்காவற்றுறை அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.கானகன் மற்றும் படகு உரிமையாளர்கள் கலந்து கொண்ட மேற்படி கலந்துரையாடலில் முக்கிய தீர்மானங்கள் பல எடுக் கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில்,அனலைதீவில் இருந்து புறப்படும் பயணிகள் படகு எழுவைதீவு சென்று பின்னர் ஊர்காவற்றுறை கண்ணகி அம்பன் கோவில் துறைமுகத்தை சென்றடைய வேண்டும். அதேபோல், ஊர்காவற்றுறையில் இருந்து புறப்படும் பயணிகள் படகும் எழுவைதீவு சென்று அங்கிருந்து அனலைதீவு சென்றடைய வேண்டும்.

அத்துடன்,அளவுக்கதிகமான பயணிகளை படகுகளில் ஏற்றுதல் கூடாது எனவும் மேற்படி கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை,ஒவ்வொரு படகிற்கும் பயணிகள் பாதுகாப்பு கவசம் ஒன்று இலவசமாக வழங்கப்படவேண்டும் எனவும்,படகினுள் ஏற்றப்படும் மட்டுப்படுத்தப்பட்ட பயணிகளுக்கேற்ப இக்கவசங்கள் படகினுள் கட்டாயமாக இருக்க வேண்டியது அவசியம் எனவும் படகு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (க-75)

# ஜனாதிபதி — பிரதமர் இணக்கமில்லாமல் இனப்பிரச்சினை தீர்வு சாத்தியமில்லை

## நவீன் திஸநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இணக்கமான கருத்து உருவாகாமல இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என தோட்டத்துறை துணை அமைச்சர் நவீன் திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையாக இருப்பதால் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி ஆகிய இரு தரப்பினருக்கும் இடையில் ஓர் இணக்கப்பாடு அவசியம்.

அவ்வாறு இருதரப்பினரதும் ஓர் இணக்கம் இல்லாமல் இனப்பிரச்சினை குறித்து எந்தவொரு தீர்வும் எடுக்கப்பட்டாலும் அது நடைமுறைக்கு வராது.

இதேவேளை தற்போதைய அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தை இலகுவில் முறிந்து விடக்கூடிய சாத்தியம் இருப்பதாக எனக்கு தெரியவில்லை.

இருப்பினும் அதனை உறுதியாக கூறவும் முடியாது என்றார்.

(க-10)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு சுற்றறிக்கை அனுப்பி வைப்பு

(சுதுமலை)

எதிர்வரும் அக்டோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் பல தரப்பட்ட நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து செயற்படுத்துமாறு வடக்கு கிழக்கு மாகாண சிறுவர் நன்நடத்தை திணைக்கள ஆணையாளர் என்.ஆர். ரஞ்சினி சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தியுள்ளார். அச் சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இவ் வருடம் அனைத்துலகச் சிறுவர் தினத்தின் கருப்பொருளாக "சிறுவர்களை வேலைக்கமர்த்துவதை தடுத்தல்" என்பது ஆகும். எனவே இக் கருப்பொருளை பிரதிபலிக்கக் கூடிய முறையில் சிறுவர்களது உரிமைகள், அவற்றைப் பாதுகாத்தல் என்பன தொடர்பாக பிரதேச மட்டத்தில் செயற்திட்டங்கள் தயாரித்து சமூகத்திலே சிறுவர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யுமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெற்றிகரமாக தங்கள் பகுதிகளில் இந் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதற்கு தங்கள் பகுதி சிறுவர் நன்னடத்தை அலுவலரின் பூரண ஒத்துழைப்பைப் பெற்று அரச/அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் செயற்படுத்துமாறும் இத் தேவைக்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் தலா இரண்டாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலை மட்டங்களில் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதற்கு வசதியாக தங்கள் பகுதி வலயக் கல்விப் பணிப்பாளர்களின் ஒத்துழைப்பையும் பெற்று நிகழ்ச்சிகளை ஒழுங்கமைக்குமாறு அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-252)

---

### ஜனாதிபதி...

கேட்டுள்ளதையடுத்து, ஜனாதிபதி இதனை ஏற்றுக் கொண்டுள்ளார். அத்துடன் பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்கான அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இவ் விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவிக்கையில்.

அரசாங்கம் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்காமல் ஒருவரின் பெயரை சிபார்சு செய்தல்கூடாது. இது ஆட்சி முறையின் அடிப்படை விதிகளை மீறுவதாகும். எயிட்ஸ் மாநாட்டில் கலந்து கொள்வதை ஜனாதிபதி ஒரு வருடத்திற்கு முன்னரே உறுதிப்படுத்திவிட்டார். இதன் மூலமே ஜனாதிபதி பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதும் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. இவ்வாறே ஜனாதிபதி பொதுச்சபைக் கூட்டத்திற்கும் அழைக்கப்படுவார் என்றே கருதப்பட்டது.

ஆனால், ஜனாதிபதியை விலக்குவது வேண்டுமென்றே செய்யப்படுவதாகவும், வெளிநாட்டமைச்சும் ஐ.நாவின் இலங்கைத் தூதரகமுமே இப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ)

---

### வயோதிப....

கூறப்படுகிறது.

இதேவேளை மேற்படிச் சம்பவத்தில் வயோதிப மாது உறவினர்களால் காப்பாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த)

---

### இந்திய....

இந்திய பாதுகாப்பு துறை அதிகாரிகளின் இலங்கை விஜயம் கடந்த வெள்ளியன்று நிறைவு பெற்றது. இதன் மூலம் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சி வழங்கும் வாயப்புகள் அதிகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இந்தியாவில் வர்த்தக முதலீடுகளை அதிகரிப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இந்திய இராணுவத்தின் அதிகாரிகள் கொண்ட பாதுகாப்பு குழுவினர் கடந்த திங்களன்று இலஙகை வந்திருந்தனர். இலங்கை இராணுவத்துடன் பாதுகாப்பு தொடர்பாக உடன்பட்டை ஏற்படுத்துவதே இவர்களது விஜயத்தின் நோக்கமாகும்.

(இ)

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை அன்ன சத்திர வீதியில் முதலாம் ஒழுங்கையில் உள்ள ஸ்ரீசெல்ல விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வு இன்று காலை இடம்பெற உள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# முழுநிலா கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

அகவொளி நிலையத்தினால் நடாத்தப்படும் 'முழுநிலாக் கருத்தரங்கு' எதிர்வரும் 10ம் திகதி புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு சென்.பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில், 'சிறுவர் துஷ்பிரயோகமும் பாதிககப்பட்ட சிறுவர்களைக் கையாள்தலும்' எனும் விடயம் பற்றி மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் இணைத்தலைவர் வைத்திய கலாநிதி ஆர்.சுரேந்திரகுமார் உரையாற்றவுள்ளார்.

(க-51)

---

### எதிரிகள்....

நாடுகளில் எல்லாம் வன்செயல்கள் மலிந்துள்ளன. கொலைகள், கொள்ளைகள், காமுகர்களது வெறியாட்டங்கள் பெருகிவருகின்றன. ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் ஆளணிகளும், வளங்களும், வசதிகளும் போதுமானவையாக இல்லாத போதும் எமது காவல்துறை மக்களை உள்வாங்கி, உறவை வளர்த்து அவர்களது பேராதரவோடும் பங்களிப்போடும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தி சிறப்பாகச் செயற்படுகிறது.

**எதிரிகள் போற்றுமளவுக்கு வளர்ந்துள்ள காவல்துறை**

எமது எதிரிகளின் பத்திரிகைகளே, போற்றிப் பெருமைப்படுமளவிற்கு காவல்துறை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாது செயற்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது தமிழீழக் காவல்துறை தேசப் பற்றுணர்வோடும், மனித நேயத்தோடும், அர்ப்பணிப்புணர்வோடும் செயல்படுகிறது. இதனையிட்டு இங்கு நான் பெருமிதங்கொள்கிறேன்.

எமது காவல்துறை சட்டம் ஒழுங்கைப் பேணுவதோடு மட்டும் நின்று விடாது சமூகத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்குமான புறநிலைகளையும் உருவாக்கிச் செயற்படுகிறது. சமூகத்தில் நிலவுகின்ற தவறான கருத்துக்களையும், பார்வைகளையும் காலத்திற்கு ஒவ்வாத வழக்குகளையும், மடைமைத் தனமான சம்பிரதாயங்களையும்களைய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இவற்றை நான் பெரிதும் பாராட்டுகிறேன் என்றும் தலைவர் பிரபாகரன் கூறினார்.

(ம)

---

### சமஷ்டி....

உறுதுணையாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களிடம் இருந்து அவர்களின் உரிமையை இலங்கை அரசியல் யாப்பு தந்திரமான முறையில் தட்டிப் பறித்துள்ளது.

இது போன்ற சிங்கள இனவாதிகளின் தந்திர முயற்சிக்கு தமிழ் மக்கள் சோரம் போகாது ஒத்துழைப்புடனும் இணக்கத்துடனும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் எமக்கு ஓர் வளமான எதிர் காலத்தை உருவாக்க முடியுமென்று பேராசிரியர் சிற்றம்பலம் மேலும் தெரிவித்தார்.

(க-4)

# முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு இன்னமும் உத்தரவாதமில்லை

## பௌஸி எம்.பி. கூறுகிறார்.

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல்களைப் போக்க, இப் பகுதிகளில் உள்ள சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும ஒன்றிணைய வேண்டும்.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌஸி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இது தொடர்பாக எதிர் வரும் 11 ஆம் திகதி விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என நான் எதிர் பார்க்கிறேன்.

கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் இனந்தெரியாத நபர்களினால் கடத்திச் செல்லப்பட்டும், கொலை செய்யப்பட்டும் வருகின்றனர்.

இது குறித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும், இச் சம்பவங்கள் முற்று முழுதாக இடைநிறுத்தப்பட்டு விடும் என்பதற்கு உத்தரவாதமில்லை எனவும் தெரிவித்தார்.

(தி)

# சமாதானம் வேண்டி பாத யாத்திரை

(கொழும்பு)

நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டும் எனவும், பேச்சுவார்த்தை மீண்டும் தொடர வேண்டும் எனவும் நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் இருந்து பாதயாத்திரை ஒன்று நடைபெற்றது.

சுமார் 20 கிலோ மீற்றர் தூரம் வரை நடத்தப்பட்ட இப் பாதயாத்திரையில், ஆரையம்பதி, கல்முனை, நாவற்குடா, வாழைச்சேனை உட்பட பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் மக்கள் கலந்து கொண்டனர்.

(தி)

# கொள்ளையிடச் சென்று ஏமாந்த கொள்ளையர்கள்

(தும்பளை)

இரவு நேரம் ஓடு பிரித்து வீட்டினுள் இறங்கிய கொள்ளைக் கோஷ்டி ஒன்று 60 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றது.

இவ்விநோதக் கொள்ளைச் சம்பவம் தும்பளை கலட்டியில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இரவு பத்துமணியளவில் வீட்டின் ஓட்டைப்பிரித்து வீட்டினுள் இறங்கிய கொள்ளைக் கோஷ்டியினர் வீட்டில் இருந்த தாயையும் 5 பிள்ளைகளையும் கத்தி முனையில் அச்சுறுத்தி அவர்கள் அனைவரையும் கதிரையில் அமருமாறு கூறிவிட்டு வீட்டினுள் தேடுதல் நடத்தினர். 60 ரூபா பணம் மற்றும் இரண்டு கைமணிக் கூடுகளைத் தவிர வேறு எதனையும் அவர்களால் அபகரிக்க முடியவில்லை.

வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பப்பட்டதாகக் கேள்விப்பட்டே கொள்ளையர்கள் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை 7 பேர் கொண்ட இக்கொள்ளைக் கோஷ்டியினர் அன்றிரவு வேறு இரு இடங்களில் கொள்ளையிட் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(து-245)


# பிரதேச செய்தியாளர் பதவி வெற்றிடம்

பின்வரும் இடங்களில் பிரதேச செய்தியாளர்களாக கடமையாற்றுவதற்கான விண்ணப்பம் ஆண்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

- ★ தெல்லிப்பழை
- ★ மருதனார்மடம்
- ★ உரும்பிராய்
- ★ கோண்டாவில்
- ★ திருநெல்வேலி
- ★ நல்லூர்
- ★ கந்தர்மடம்
- ★ அரியாலை
- ★ நாயன்மார்கட்டு

இப்பதவிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்கள் தங்களது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித் தகைமை, தொழில், தொழில் புரியும் இடம் என்பன உள்ளடங்கியதாக தயாரிக்கப் பட்ட விண்ணப்பங்களை;

பிரதம ஆசிரியர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு இம் மாதம் 10-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு : வயதெல்லை வரையறுக்கப்படவில்லை.

வலம்பரி — ஆளணி முகாமையாளர்


# மரண அறிவித்தல்

## நாராயணி முத்தாலிங்கம்

### (இளைப்பாறிய ஆசிரியர்)

சாவகச்சேரி டச்சு வீதியை சேர்ந்த நாராயணி முத்தாலிங்கம் (ஆசிரியர்) கடந்த 06.09.2003 சனிக்கிழமை அன்று சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணி பூரணத்தின் அன்பு மகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சந்திரபாலன்(பிரான்ஸ்) மணிவண்ணன்(இந்தியா) மணிமாறன்(லண்டன்) லலிதாராணி(இந்தியா) பூரணேஸ்வரி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 06.09.2003 அன்று பிப 4.00மணியளவில் சென்னையில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
திரு. த.மணிசுந்தரம்
குடும்பத்தினர்

கலட்டி வீதி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.


# ஸ்ரீசெல்வச்சந்நிதி முருகனின் அழகிய படம் வெளியீடு

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகனின் தேர்த்திருவிழா அன்று சந்நிதி முருகனின் அழகிய படம் திரு.எம்.கே.சிவாஜிலிங்கம் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களால் தேருக்கு அருகாமையில் உள்ள மண்டபத்தில் வைத்து காலை 10.00மணியளவில் ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சார்பில் வெளியிடப்படவுள்ளது.

படம் பிரதியாக்கம் — விநியோகம
ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

அப் படமானது அன்றைய தினமே விற்பனையாகவுள்ளது அத்துடன் ரூபா.50 பெறுமதியான "ஸ்ரீ முருகன் பாமாலை" இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு:- இதுவரை காலமும் பக்தர்களின் உதவியால் விதவைகள், குழந்தைகள் போன்றவர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்தின் மூலம் ரூபா ஐம்பது லட்சம் வழங்கப்படவுள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை

[C/6591]



# தேவை

கணனிப் பக்க வடிவமைப்பாளர் தேவை.
கிழமை நாட்களில் நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:-
திஷா கொம்பியூட்டர்
ஒவ்செற் பிறின்ரேஸ்
இணுவில் சந்தி
K.K.S. றோட்

[C/6627]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.